ISSN: 2582–5518




புதுகை
# வரலாறு
நாளிதழ்
WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARU 7502051351




வியாழன் ❖ செப்டம்பர். 28, 2023 | சென்னை & புதுக்கோட்டை | 6 பக்கம் ❖ வரலாறு 8 ❖ இதழ் 362 ❖ ரூ.10

## நியோ மேக்ஸ் இயக்குநர்கள் அனைவரையும் ஒரு மாதத்தில் கைது செய்ய உயர் நீதிமன்றம்

# அதிரடி

### 96 பேர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ள போதில் 11 இயக்குநர்கள்தான் கைது செய்யப்பட்டுள்ளனர். அனைத்து சொத்து ஆவணங்களையும் போலீஸார் பறிமுதல் செய்ய உத்தரவு

மதுரை, செப். 28-

நியோ-மேக்ஸ் மோசடி வழக்கில் நிறுவனத்தின் அனைத்து இயக்குநர்களையும் ஒரு மாதத்தில் கைது செய்ய வேண்டும் என்று உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.




நியோ-மேக்ஸ்மோசடி வழக்கைசிபிஐக்குமாற்றக் கோரி கும்பகோணத்தை சேர்ந்த கவுதமி, உயர் நீதிமன்ற கிளையில் மனு தாக்கல் செய்துள்ளார். இந்த மனு நீதிபதி கே.கே. ராமகிருஷ்ணன் முன்பு விசாரணைக்கு வந்தது. மனுதாரர் வழக்கறிஞர் வாதிடுகையில், "முக்கிய குற்றவாளிகள் இதுவரை கைது செய்யப்படவில்லை.கைது செய்யப்பட்டவர்களில் சிலர் ஜாமீனில் வெளிவந்துவிட்டனர். பல ஆயிரம் கோடி ரூபாய் அளவில் மோசடி நடைபெற்றுள்ளது. மனுதாரரை போனில் மிரட்டி வருகின்றனர். இதனால் விசாரணையை சிபிஐக்குமாற்றவேண்டும்" எனக் கூறப்பட்டது.

அரசு வழக்கறிஞர் வாதிடுகையில், "நியோ-மேக்ஸ் மோசடி தொடர்பாக 96 பேர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. இது வரை 11இயக்குநர்கள்கைது செய்யப்பட்டுள்ளனர். முக்கிய இயக்குனர்களான கமலக்கண்ணன், சிங்கரவேலன் கைது செய்யப்பட்டுள்ளனர். 9,500 ஆவணங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. விசாரணை தொடர்ந்து நடைபெற்று வருகிறது. தலைமறைவாக இருப்பவர்களை கைது செய்ய தனிப்படை அமைக்கப்பட்டுள்ளது. விசாரணை முறையாக நடைபெற்று வருகிறது" என்றார்.

இதையடுத்து நீதிபதி, "96பேர்மீதுவழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது. தற்போது வரை 11 இயக்குநர்கள்தான் கைது செய்யப்பட்டுள்ளனர். ஒரு மாதத்தில் அனைத்து இயக்குநர்களையும் கைது செய்து, அனைத்துசொத்து ஆவணங்களையும் போலீஸார் பறிமுதல் செய்ய வேண்டும். இல்லையெனில், விசாரணையை சிபிஐக்கு மாற்ற வேண்டியது வரும்" என உத்தரவிட்டு விசாரணையை ஒத்திவைத்தார்.

நியோ மேக்ஸ் பிரச்சினைக்கு தீர்வு காண உயர் நீதிமன்ற ஓய்வு பெற்ற நீதிபதி தலைமையில் ஆணையம் அமைக்கக் கோரி நியோ மேக்ஸ் இயக்குநர்கள் பழனிச்சாமி, பாலசுப்பிரமணியன் ஆகியோர் உயர் நீதிமன்ற கிளையில் மனு தாக்கல் செய்துள்ளனர். இந்த மனு நீதிபதி நாகர்ஜுன் முன்பு விசாரணைக்கு வந்தது.

அப்போதுநீதிபதி,'நியோ மேக்ஸ் நிறுவனத்தில் முதலீடு செய்து பாதிக்கப்பட்டவர்கள் தமிழகம் முழுவதும் உள்ளனர். இதனால் மாநில அளவில் குழு அமைக்கலாம். இதற்கும் பொருளாதார குற்றப்பிரிவு போலீஸ் நடவடிக்கைக்கும் தொடர்பில்லை. குழு அமைத்தாலும் போலீஸார் விசாரணையை தொடரலாம்' என்றார். அரசு தரப்பில், தலைமை குற்றவியல் வழக்கறிஞர் ஆஜராக கால அவகாசம் கோரப்பட்டது. இதையேற்று விசாரணையை நீதிபதி ஒத்திவைத்தார்.




அரசுமுறைப் பயணமாக எகிப்து தலைநகர் கெய்ரோ சென்றுள்ள தமிழ்நாடு சட்டப் பேரவைத் தலைவர் அப்பாவு நேற்று அந்நாட்டின் செனட் துணை சபாநாயகர் பாஹா எல்டின் ஸுக்கா (Bahaa El-Din shukka) தலைமையில் நடைபெற்ற செனட் சபையின் கலந்துரையாடல் கூட்டத்தில் கலந்துக் கொண்டார். இக்கூட்டத்தில், அந்நாட்டின் செனட் செகரட்டரி ஜெனரல் முகம்மது இஸ்மாயில் இட்மேன் (Mahmoud Ismail Etman), இந்திய தூதர் அஜித் குப்தா, அசாம் சட்டப் பேரவைத் தலைவர் பிஸ்வாஜித் டைமாரி ஆகியோர் உள்ளனர்.

## அதிமுகவில் 5 புதிய மாவட்டச் செயலாளர்கள் நியமனம்

சென்னை , செப். 28-

அதிமுகவில்காலியாக இருந்த 5 மாவட்டச் செயலாளர்கள் பதவிக்கு புதிய நிர்வாகிகளை நியமித்து அக்கட்சியின் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி அறிவிப்பு வெளியிட்டுள்ளார். கன்னியாகுமரி மாவட்டச்செயலாளராக முன்னாள் அமைச்சர் தளவாய் சுந்தரம் நியமிக்கப்பட்டுள்ளார்.

அதிமுகவில்காலியாக இருந்த பதவிகளுக்கு புதிதாக நிர்வாகிகளை நியமித்து அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி உத்தரவிட்டுள்ளார். அதிமுகவில் இருந்து ஓ.பன்னீர்செல்வத்தின் ஆதரவாளர்கள் வெளியேறிய நிலையில், அதிமுகவில் கன்னியாகுமரி, தேனி, பெரம்பலூர், தஞ்சை உள்பட சில மாவட்டச் செயலாளர் பதவிகள் காலியாக இருந்து வந்தன. இந்நிலையில், அந்தப் பதவிகளுக்கு புதிய நிர்வாகிகளை நியமித்து எடப்பாடி பழனிசாமி உத்தரவு பிறப்பித்துள்ளார். அதன்படிகன்னியாகுமரி (கிழக்கு) மாவட்டச் செயலாளராக முன்னாள் அமைச்சர் தளவாய் சுந்தரம் நியமிக்கப்பட்டுள்ளார்.

திருச்சி மாநகர் மாவட்டச் செயலாளராக, முன்னாள் துணை மேயர் சீனிவாசன் புதிய மாவட்டச்செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். பெரம்பலூர் மாவட்டச் செயலாளராகமுன்னாள் எம்எல்ஏ இளம்பை தமிழ்ச்செல்வன் நியமிக்கப்பட்டுள்ளார். தஞ்சாவூர் (கிழக்கு) மாவட்டச் செயலாளராக முன்னாள் எம்எல்ஏ ராமநாதன் நியமிக்கப்பட்டுள்ளார். தஞ்சாவூர் (மத்திய) மாவட்டச் செயலாளராக சரவணன் நியமிக்கப்பட்டுள்ளார்.

அதிமுகவின் அமைப்புச் செயலாளராக முன்னாள்எம்.பி.அன்வர் ராஜா, முன்னாள் அரசு தலைமை கொறடா மனோகரன், ராயபுரம் மனோ உள்ளிட்ட 7 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர். அதிமுக வழக்கறிஞர் பிரிவு செயலாளராக முன்னாள் எம்எல்ஏ இன்பதுரை, கட்சியின் கொள்கைபரப்புஇணைச் செயலாளராக விந்தியா, மருத்துவ அணி இணைச் செயலாளராகமுன்னாள் எம்எல்ஏ டாக்டர் சரவணன் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அதேபோல், ராணிப்பேட்டை, திருவண்ணாமலை, திருநெல்வேலி உள்ளிட்ட மாவட்டச்செயலாளர்கள் பொறுப்பில் ஏற்கெனவே இருந்த நிர்வாகிகள் விடுவிக்கப்பட்டு, புதிய நிர்வாகிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். இவ்வாறு பல்வேறு காலியாக இருந்த கட்சிப் பொறுப்புகளுக்கு புதிய நிர்வாகிகளை நியமித்து எடப்பாடி பழனிசாமி உத்தரவிட்டுள்ளார்.




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற விழாவில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் வாயிலாக தொகுதி-4 பணியிடங்களுக்கு தேர்வு செய்யப்பட்ட 10,205 இளைஞர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக, 12 இளைஞர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கி, வாழ்த்தினார். இந்த விழாவில், அமைச்சர்கள் பெரியசாமி, கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு, மு.பெ. சாமிநாதன், அர. சக்கரபாணி, மா. சுப்பிரமணியன், பி.கே. சேகர்பாபு, அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, மனிதவள மேலாண்மைத் துறை செயலாளர் (முழு கூடுதல் பொறுப்பு) கே.நந்தகுமார், துறைச் செயலாளர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## சனாதன சர்ச்சை பேச்சு உதயநிதி, சேகர்பாபுவை பதவி நீக்கம் செய்ய ஆளுநரிடம் விஹெச்பி தலைவர்கள் வலியுறுத்தல்

சென்னை , செப். 28-

சனாதன ஒழிப்பு மாநாட்டில் பங்கேற்ற அமைச்சர்கள் உதயநிதி மற்றும் சேகர்பாபுவை பதவியில் இருந்து நீக்க வேண்டும் என்று ஆளுநர் ஆர்.என். ரவியை நேரில் சந்தித்து விஹெச்பி தலைவர்கள் வலியுறுத்தினர்.



சென்னையில் கடந்த 2-ம் தேதி நடைபெற்ற தமிழக முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் சனாதன ஒழிப்பு மாநாட்டில் விளையாட்டுத் துறை அமைச்சர் உதயநிதியும், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் சேகர்பாபுவும் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியில் பேசிய உதயநிதிஸ்டாலின்,"இந்த மாநாட்டின் தலைப்பே மிகவும் சிறப்பாக அமைந்திருக்கின்றது. 'சனாதன எதிர்ப்பு மாநாடு'என்றுபோடாமல் 'சனாதன ஒழிப்பு மாநாடு' என்று நீங்கள் போட்டிருக்கிறீர்கள். அதற்கு என்னுடைய வாழ்த்துகள். சிலவற்றை நாம் ஒழிக்கத்தான் வேண்டும். எதிர்க்க முடியாது.

கொசு, டெங்கு காய்ச்சல், மலேரியா, கரோனாஇதையெல்லாம் நாம் எதிர்க்கக் கூடாது. ஒழித்துக்கட்ட வேண்டும். அப்படித்தான் இந்த சனாதனம். சனாதனம் என்பதைஎதிர்ப்பதைவிட, ஒழிப்பதே நாம் செய்ய வேண்டிய முதல் காரணம். எனவே, இந்த மாநாட்டுக்கு மிகப் பொருத்தமான தலைப்பு வைத்திருக்கிறீர்கள். அதற்கு என்னுடைய பாராட்டுக்கள்" என தெரிவித்திருந்தார்.

உதயநிதியின் இந்தப் பேச்சுக்குநாடுமுழுவதும் கடும் எதிர்ப்பு எழுந்தது. மத்திய அமைச்சர்கள் அமித் ஷா, ராஜ்நாத் சிங் உள்ளிட்டோர் உதயநிதியின் பெயரைக் குறிப்பிடாமல், அவர் பேசிய பேச்சுக்கு கண்டனம் தெரிவித்தனர். சனாதன ஒழிப்பு தொடர்பான பேச்சுக்கு உரிய பதிலடி கொடுக்கும்படி பிரதமர் மோடியும் பாஜக தலைவர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்நிலையில், விஸ்வ இந்து பரிஷத்தின் தேசிய செயல் தலைவர் அலோக் குமார், அகில பாரதிய சந்த் சமிதியின் பொதுச் செயலாளர் தண்டி சுவாமி ஜீதேந்திரானந்த சரஸ்வதி, வெள்ளிமலை ஆசிரமத்தின் சைதன்யானந்தா சுவாமி மதுராநந்தா உள்ளிட்டோர் தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவியை, ஆளுநர் மாளிகையில் சந்தித்து இந்த விவகாரம் தொடர்பாக மனு அளித்தனர்.

இதனையடுத்து செய்தியாளர்களிடம் பேசிய விஸ்வ இந்து பரிஷத்தின் தேசிய செயல் தலைவர் அலோக் குமார், "சனாதன ஒழிப்பு மாநாட்டில் அமைச்சர்கள் பங்கேற்றது பொறுப்பற்ற செயல். சனாதன தர்மத்தை பின்பற்றும் மக்களை அச்சுறுத்தும் நடவடிக்கை செயல். இது நேரடியாக அரசியல் சாசனத்தை மீறும் செயல். நிகழ்ச்சியில் பேசிய அமைச்சரின் பேச்சு வெறுப்பை பரப்பக்கூடியது; இரு சமூகங்களுக்கு இடையே பகைமையை உண்டாக்கக்கூடியது. இந்திய தண்டனைச் சட்டப்படி இது ஒருகுற்றச் செயல்.

தமிழ்நாட்டில் உள்ள கோயில்களை பராமரிக்கும் பாதுகாக்கும் இந்து சமய அறநிலையத் துறையின் அமைச்சர் சேகர்பாபு இதில் கலந்து கொண்டது மிக மோசமான செயல். அதோடு, அறநிலையத் துறை அமைச்சராக தனது அலுவலக கடமைகளை மீறிய குற்றத்தையும் அவர் செய்துள்ளார்.

இது இரண்டு கேள்விகளை எழுப்புகிறது. ஒன்று, அரசியல் சாசனத்தின்படி பதவிஏற்ற அமைச்சர்கள், அரசியல் சாசனத்துக்கு எதிராகச் செயல்பட்டிருப்பதால், அவர்கள் அமைச்சர் பதவியில் நீடிக்க தகுதி அற்றவர்களாகிறார்கள். இரண்டாவது, அமைச்சரின் இந்தப் பேச்சு, அரசின் கருத்து அல்ல என்று தமிழ்நாடு அரசு மறுக்கவில்லை. எனவே, அமைச்சரின் பேச்சு, அரசின் கருத்தாக ஆகிறது.

இந்தவிவகாரம்குறித்து உரிய பரிசீலனையை மேற்கொள்ள வேண்டும் என்று நாங்கள், ஆளுநரை கேட்டுக்கொண்டோம். அரசியல்சாசனத்தின்படி தமிழ்நாடு அரசு இயங்க முடியாது என்றால், அது குறித்து குடியரசுத் தலைவருக்கு அறிக்கை அளிக்குமாறு ஆளுநரை கேட்டுக்கொண்டோம். இதுபோன்ற ஒரு சூழல் தொடர அனுமதிக்கலாமா என்பது குறித்து மத்திய அரசு கவனத்தில் கொள்ள வேண்டும்.

எனவே, இந்த விவகாரம் தொடர்பாக நாங்கள் மூன்று கோரிக்கைகளை முன்வைத்துள்ளோம். உதயநிதிஸ்டாலின் மற்றும் சேகர்பாபு ஆகிய இரண்டு அமைச்சர்களையும் பதவி நீக்கம் செய்ய வேண்டும், தமிழக அரசின் நிலை தொடர்பாக மத்திய அரசுக்கு அறிக்கை அனுப்ப வேண்டும், இதுதொடர்பாக மத்திய அரசு போதுமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். ஜனநாயகத்தை விரும்பும் நாட்டு மக்கள் குறிப்பாக தமிழக மக்கள், நாட்டின் மதச்சார்பற்றத் தன்மையைப் பாதுகாக்கும் வகையில், இத்தகைய கருத்துகளை ஒரே குரலில் எதிர்க்க வேண்டும்" என்று தெரிவித்தார்.



புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளம் ஒன்றியம், வல்லத்திராக்கோட்டை அரசு மேல்நிலைப்பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகளை சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் மெய்யநாதன் நேற்று வழங்கினார். உடன் மாவட்ட கல்வி அலுவலர் (அறந்தாங்கி) ராஜேஸ்வரி, திருவரங்குளம் ஒன்றியக்குழு தலைவர் வள்ளியம்மை தங்கமணி, உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் பலர் உள்ளனர்.

# இன்று




## சிந்திப்போம்.... செயல்படுவோம்







# சங்கரன்கோவிலில் நெடுஞ்சாலை துறை சார்பில் சாலை விழிப்புணர்வு நிகழ்ச்சி : எம்எல்ஏ ராஜா, டிஎஸ்பி சுதீர் பங்கேற்பு



சங்கரன்கோவில், செப்.28–

சங்கரன்கோவில் உட்கோட்ட நெடுஞ்சாலை துறை சார்பில் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. சங்கரன்கோவில் அரசு பயணியர்விடுதியில்முன்பு நடந்த இந்த நிகழ்ச்சிக்கு சங்கரன்கோவில் நெடுஞ்சாலை துறை உதவி கோட்ட பொறியாளர் உலகம்மாள் தலைமை வகித்தார், உதவி பொறியாளர்கள் பலவேசம், முத்துமணி ஆகியோர்முன்னிலை வகித்தனர்.

இதில் சிறப்பு அழைப்பாளர்களாக தென்காசிவடக்குமாவட்ட செயலாளர் ராஜா எம்எல்ஏ,சங்கரன்கோவில் டிஎஸ்பி சுதீர் ஆகியோர் கலந்து கொண்டு பொதுமக்களுக்கு சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு குறித்ததுண்டு பிரசுரங்கள் வழங்கி ஹெல்மெட் அணிந்து வந்தவர்களுக்கு இனிப்புகள்மற்றும்மலர்கள் வழங்கி அவர்களை உற்சாகப்படுத்தினர். தொடர்ந்து ஹெல்மெட் அணியாமல் வந்தவர்களுக்கு ஆலோசனை கூறி இலவசமாக ஹெல்மெட்டுகள் வழங்கப்பட்டது, மேலும் இதில் சாலை ஆய்வாளர்கள் மற்றும் சாலை பணியாளர்கள் விழிப்புணர்வு பதாகைகளுடன் சாலை பாதுகாப்புவிழிப்புணர்வை பொதுமக்களுக்கு ஏற்படுத்தினர்.

தொடர்ந்துகாணொளி காட்சி மூலம் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது, இந்த நிகழ்ச்சியில் திமுக மாவட்டப் பொருளாளர் சரவணன், திமுக ஒன்றிய செயலாளர்கள் பெரியதுரை சேர்மதுரை ,நகர செயலாளர் பிரகாஷ், பேரூர் கழகச் செயலாளர் மாரிமுத்து, மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் பிச்சையா, மாவட்ட ஆதிதிராவிடர் அணிஅமைப்பாளர்கேஎஸ். எஸ்மாரியப்பன்,மாவட்ட பிரதிநிதி செய்யதுஅலி, மாவட்ட மாணவரணி அமைப்பாளர்உதயகுமார், மாவட்டதொண்டர்அணி அமைப்பாளர் அப்பாஸ் அலி, மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் களப்பாகுளம்பஞ்சாயத்து தலைவர் சிவசங்கரி, மாவட்ட அணி துணை அமைப்பாளர்கள் கார்த்தி, ராஜராஜன், அன்சாரி ,முருகராஜ், வீரமணி, கலைச்செல்வன் மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு உறுப்பினர் சங்கர், சாலை பாதுகாப்புகுழுஉறுப்பினர் வக்கீல்சதீஷ்,வெங்கடேஷ், நகரத்துணைச்செயலாளர் சுப்புத்தாய் மற்றும் ஜலால், தகவல் தொழில்நுட்ப அணி மணி, கணேசன், ஜெயராம், அயலக அணி முருகன், ஜெயக்குமார், பிரகாஷ்,விக்னேஷ் மற்றும் சாலை ஆய்வாளர்கள், சாலை பணியாளர்கள் பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# காந்தி ஜெயந்தி அன்று அனைத்து ஊராட்சிகளிலும் கிராம சபைக் கூட்டம்– மாவட்ட ஆட்சியர் மெர்சி ரம்யா தகவல்



புதுக்கோட்டை ,செப்.28–

காந்தி ஜெயந்தி அன்று அனைத்து ஊராட்சிகளிலும் கிராம சபைக் கூட்டம் நடைபெறும் என்று மாவட்ட ஆட்சியர் மெர்சி ரம்யா தெரிவித்துள்ளார்.

காந்தி ஜெயந்தி தினமான அக்டோபர் 2–ம்தேதியன்று காலை 11.00 மணிக்கு புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள 497 கிராம ஊராட்சிகளிலும் கிராம சபைக் கூட்டம் நடைபெறவுள்ளது. இக்கூட்டத்தில் கிராம ஊராட்சி நிர்வாகம், பொது நிதி செலவினம் மற்றும் திட்டப் பணிகள் குறித்துவிவாதித்தல்,கிராம ஊராட்சியின் தணிக்கை அறிக்கை, ஊரகப் பகுதிகளில் மழைநீர் சேகரிப்பு அமைப்புகள் ஏற்படுத்த எடுக்கப்பட வேண்டியநடவடிக்கைகள், வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள், கொசுக்கள் மூலம் பரவும் டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள் குறித்து விவாதித்தல், மகாத்மா காந்திதேசிய ஊரகவேலை உறுதித்திட்டம்,அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம், தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்), ஜல் ஜீவன் இயக்கம், பிரதம மந்திரி ஊரககுடியிருப்புதிட்டம், 2023–24–ஆம்ஆண்டிற்கான சமூக தணிக்கை செயல் திட்டத்தினை பொதுமக்களுக்கு அறிவித்தல், கிராம ஊராட்சியின் தணிக்கை அறிக்கை, மக்கள் திட்டமிடல் இயக்கம், காசநோய் இல்லா கிராம ஊராட்சியாக அறிவிப்பு செய்தல் மற்றும் இதர பொருட்கள் விவாதிக்கப்பட உள்ளன.

மேற்குறிப்பிட்டுள்ள அரசின் திட்டங்கள் மற்றும் ஊராட்சியின் செயல்பாடுகள் பற்றிய விபரங்களை தெரிந்து கொண்டு பயன்பெறும் வகையில் பொதுமக்கள், மகளிர் சுய உதவிக் குழுக்களைச்சார்ந்தவர்கள், மாற்றுத்திறனாளிகள் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் என அனைவரும் அதிக அளவில் கலந்துகொண்டு கிராம சபை கூட்டத்தை சிறப்பிக்க கேட்டுக் கொள்கிறேன்எனமாவட்ட ஆட்சியர் மெர்சி ரம்யா தெரிவித்துள்ளார்.






சென்னை தலைமைச் செயலகத்தில் நிதித்துறை மின்சாரம் மற்றும் மனித வள மேலாண்மை துறை அமைச்சர் தங்கம் தென்னரசுவிடம் பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மனுவினை தென்காசி தெற்கு மாவட்ட திமுக பொறுப்பாளர் ஜெயபாலன் நேரில் வழங்கினார்.

# அறந்தாங்கி வருவாய் வட்டாட்சியரை தாக்கிய புகரில் ஒருவர் கைது



அறந்தாங்கி, செப்.28–

புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி அருகே சிலட்டூர் பகுதியில் அனுமதியின்றி மாட்டு வண்டியில் மணல் ஏற்றி செல்வதாக வட்டாட்சியருக்கு ரகசிய தகவல் கிடைத்தது, தகவலின் பேரில் அறந்தாங்கி வருவாய் வட்டாட்சியர் பாலகிருஷ்ணன் மற்றும் அலுவலக அதிகாரிகள் அப்பகுதியில் சோதனையில் ஈடுபட்டனர்.

அவ்வழியாக ஆற்றுமணல் ஏற்றி வந்த 3 மாட்டு வண்டிகளை மடக்கி விசாரித்துக் கொண்டிருக்கும் பொழுது அழியாநிலை கிராமத்தைச் சேர்ந்த தங்கராசு என்பவர் வட்டாட்சியர் பாலகிருஷ்ணனுடன் வாக்குவாதத்தில்ஈடுபட்டு அவரை தாக்கிவிட்டு மணலுடன் மாட்டு வண்டி எடுத்து கொண்டு தப்பிச் சென்றுள்ளார்.

உடனே அறந்தாங்கி வட்டாட்சியர் பாலகிருஷ்ணன் தன்னை பணி செய்யவிடாமல் தடுத்தும் கையால் தாக்கியதாகவும் கூறி அறந்தாங்கி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார், புகாரின் பேரில் அறந்தாங்கி காவல்துறையினர் வழக்கு பதிவுசெய்துதங்கராசுவை கைது செய்துவிசாரணை நடத்தி வருகின்றனர்.

# அரியலூர் மாவட்ட திமுக பொறியாளர் அணி சார்பில் கலைஞர் கருணாநிதி நூற்றாண்டு விழா பேச்சுப்போட்டிகள்



அரியலூர்,செப்.28–

அரியலூர் மாவட்ட திமுக பொறியாளர் அணி சார்பில், கலைஞர் கருணாநிதி நூற்றாண்டு விழா பேச்சுப்போட்டி நடைபெற்றது.

அரியலூர் மாவட்டம், உடையார்பாளையம் அடுத்துள்ள, தத்தனூர் மீனாட்சி இராமசாமி பொறியியல் கல்லூரியில், அரியலூர் மாவட்ட திமுக பொறியாளர் அணி நடத்திய, மாவட்ட அளவிலான பொறியியல், பாலிடெக்னிக் கல்லூரி மாணவர்களுக்கான பேச்சுப்போட்டி நடைபெற்றது.போட்டிக்கு தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர்சா.சி.சிவசங்கர் தலைமை வகித்தார், மீனாட்சி இராமசாமி கல்வி நிறுவனங்களின் தாளாளர் இரகுநாதன் முன்னிலை வகித்தார் .

ஜெயங்கொண்டம் சட்ட மன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன், திமுக மாநிலதுணை கொள்கை பரப்பு செயலாளர் பெருநற்கிள்ளி, மாநில சட்டக்குழு உறுப்பினர் சுபா.சந்திரசேகர், மாநில பொறியாளர் சங்கத்தலைவர் பரமேஸ்வரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர், மாவட்ட பொறியாளர் அணி பொறுப்பாளர்கள் மற்றும் திமுக நிர்வாகிகள் பங்கு பெற்றனர்.

மாலையில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில், சட்டமன்ற தொகுதி வாரியாகவெற்றி பெற்ற மாணவர்களுக்கு, மீனாட்சி இராமசாமி கல்வி நிறுவனங்களின் தாளாளர் மற்றும் செயலாளர் எம்.ஆர் இரகுநாதன் பரிசு வழங்கினார்.

# திருமாவளவனிடம் எடப்பாடி பழனிசாமி நலம் விசாரிப்பு



சென்னை, செப்,28

விசிக தலைவரும், சிதம்பரம் எம்.பி.,யுமான திருமாவளவன் காய்ச்சல் காரணமாக சென்னை வடபழனியில் உள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

அவருக்கு மருத்துவர்கள் சிகிச்சை அளித்து வருகின்றனர். இரண்டு நாட்கள் மருத்துவமனையில் சிகிச்சை பெற மருத்துவர்கள் அறிவுறுத்தியுள்ளனர். இந்த நிலையில், அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி, தொலைபேசியில் தொடர்பு கொண்டு திருமாவளவனிடம் உடல்நலம் குறித்து விசாரித்துள்ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நலம் விசாரித்த நிலையில், பல்வேறு கட்சி தலைவர்களும் நலம் விசாரித்து வருகின்றனர்.

# பொன்னமராவதி ஒன்றிய குழு கூட்டம்

# காரையூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கூடுதல் மருத்துவர்களை நியமிக்க வலியுறுத்தல்



பொன்னமராவதி, செப்.28–

பொன்னமராவதி அருகே உள்ள காரையூர் மற்றும் சுற்றுவட்டாரப்பகுதியில் உள்ள இருபதிற்கும் மேற்பட்ட கிராமங்களின் ஒரே மருத்துவ ஆதாரமாக விளங்கும் அரசு ஆரம்பசுகாதார நிலையத்திற்கு கூடுதல் மருத்துவர்களை நியமிக்க பொன்னமராவதி ஒன்றியக்குழு கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

பொன்னமராவதி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் ஒன்றியக்குழு கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு ஒன்றியக்குழு தலைவர் சுதா அடைக்கலமணி தலைமைவகித்தார், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் அ.வீரையன், ச.கருணாகரன் , ஒன்றியக்குழு துணைத்தலைவர் அ.தனலெட்சுமி ஆகியோர் முன்னிலை வகித்தனர், கூட்டத்தில் நல்லூர் ஒன்றியக்குழு உறுப்பினர் பழனியப்பன் பேசியதாவது, காரையூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கூடுதல் மருத்துவர்களை நியமிக்க சுகாதாரத்துறை நடவடிக்கை எடுக்கவேண்டும், கார்ணாப்பட்டியில் பேருந்து நிழற்குடை அமைக்கவேண்டும்.

ஒன்றியக்குழு உறுப்பினர் கோ.பழனியாண்டி} மிகவும் சேதமடைந்து காணப்படும் படுதினிப்பட்டி} ஆவாம்பட்டி சாலையை சீரமைக்கவேண்டும், உடையாம்பட்டி அங்கன்வாடி மையத்திற்கு கட்டடம் கட்டித்தரவேண்டும், செம்பூதி ஒன்றியக்குழு உறுப்பினர் மாணிக்கம்} செம்பூதி கண்மாயிலிருந்து ஊருக்குள் செல்லும் சாலையை சீரமைக்கவேண்டும் என்றார்.

தொடர்ந்து பேசிய வட்டார வளர்ச்சி அலுவலர் அ.வீரையன் உறுப்பினர்களின் கோரிக்கைகள் மீதுநடவடிக்கை எடுக்கப்படும் என்றார், கூட்டத்தில் வரவு.செலவு அறிக்கைகள் வாசிக்கப்பட்டது. ஒன்றியக்குழு உறுப்பினர்கள் அ.அடைக்கலமணி, பழனியப்பன், பழனியாண்டி, மாணிக்கம், சுகாதார ஆய்வாளர் தியாகராஜன் மற்றும் பல்வேறு துறை சார்ந்த அலுவலர்கள் பங்கேற்றனர்.

# கடையநல்லூரில் கலை மற்றும் அறிவியல் கல்லூரி நடத்திய கலைஞர் நூற்றாண்டு விழாவில் ஆண், பெண் இருபாலருக்கான கபாடிபோட்டிகள்



கடையநல்லூர், செப்.28–

தென்காசி மாவட்டம் கடையநல்லூர் தமிழக அரசு அறிவுறுத்தலின்படி கலை மற்றும் அறிவியல் கல்லூரிநடத்திய கலைஞர் நூற்றாண்டுவிழாவில்ஆண், பெண் இருபாலருக்கான கபாடிபோட்டிகள் தனித்தனியேநடைபெற்றது. ஆண்களுக்கான இறுதிப்போட்டி மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக கல்லூரி நாகம்பட்டியும், புளியங்குடி மனோ கல்லூரியும் விளையாடி புளியங்குடி மனோ கல்லூரி வெற்றி பெற்றது. நாகம்பட்டி இரண்டாவது இடம், மூன்றாவது இடம் அரசு கலைக் கல்லூரி சுரண்டை ,வெற்றி பெற்ற வீரர்களுக்கு தலைமை செயற்குழு உறுப்பினரும், தென்காசிதெற்குமாவட்ட முன்னாள்திமுகமாவட்ட செயலாளர் மா. செல்லத்துரை தலைமை தாங்கி சூழல்கோப்பைகளையும், ரொக்கப் பரிசுகளையும் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில்திமுக நகரச் செயலாளர் எஸ். அப்பாஸ், மாவட்ட திட்டக்குழு உறுப்பினர் ரா. முருகன், கல்லூரி முதல்வர் ஆர். குமரன்,உடற்கல்வி ஆசிரியர் குருசித்திர சண்முகபாரதி, முன்னாள் முதல்வர் அனிரக்லேன்ட், நகர் மன்றதலைவர்மூப்பன்ஹபீபுர் ரஹ்மான், சிட்டி திவான் மைதீன், இத்தாலியன் பீரப்பா, செய்யது மசூது, நல்லையா, மதி, நகரத் துணைச் செயலாளர் காசி, ஜாகிர் உசேன், 15 பெண்களுக்கான அணிகள் கலந்துகொண்டதில்வெற்றி பெற்ற சி.எஸ்.ஐ. அன்ன பாக்கியம் அணியினருக்கு முதல் பரிசை கடையநல்லூர் யூனியன் சேர்மன் சுப்பம்மாள் சுழற் கோப்பையும், ரொக்கத் தொகையும் வழங்கினார் இந்நிகழ்ச்சியில்செந்தூரான் நிதி நிறுவன இயக்குனர் சிவமணி,கலைச்செல்வன், ராஜா,என்.எஸ்.எஸ். ஆறுமுகம், சாம்சன், லாரன்ஸ், பால் மகேஷ் கல்லூரி பேராசிரியர்கள் மாணவ, மாணவிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# போக்குவரத்து போலீசாருக்கு குளிர்விக்கும் தொப்பி; சட்டையில் கேமரா



சென்னை, செப்,28


சென்னை: ஆந்திரா, குஜராத், மேற்கு வங்கத்தை தொடர்ந்து, சென்னையில் உள்ள போக்குவரத்து போலீசாருக்கு, குளிர்விக்கும் தொப்பி வழங்கப்பட்டு உள்ளதை போல் தற்போது சென்னையிலும் அறிமுகமாகி உள்ளது.

கடும் வெயில் காலத்தில், போக்குவரத்து போலீசாருக்கு சிறப்பு தொப்பி வழங்கப்படும். இது, வெயிலையும், வெப்பத்தையும் தாங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டு இருக்கும். தற்போது, அவர்களுக்கு சோதனை முறையில் குளிர்விக்கும் தொப்பி வழங்கப்பட்டுள்ளது.

இந்த தொப்பியின் மேற்புறத்தில், பிளாஸ்டிக்கால் வடிவமைக்கப்பட்ட மின்விசிறி பொருத்தப்பட்டிருக்கும். அதனுடன் சார்ஜ் செய்யக்கூடிய பேட்டரி இணைக்கப்பட்டு இருக்கும். இந்த பேட்டரியை, போலீசார் தங்கள் இடுப்பு பகுதியில் மாட்டிக் கொள்ளலாம்.

பேட்டரி உதவியுடன் சுழலும் மின்விசிறி, கடும் வெயிலில் போலீசாருக்கு குளிர்ச்சியான காற்றை கொடுக்கும். இந்த தொப்பி, 900 கிராம் எடையில் தயாரிக்கப்பட்டுள்ளது. இதை, உத்தரகண்ட் மாநிலத்தைச் சேர்ந்த 'கரம்' என்ற தனியார் நிறுவனம் தயாரித்து உள்ளது.

தற்போது சோதனை முறையில், சிலருக்கு மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. இதன் பயனை பொறுத்து, போக்குவரத்து போலீசார் அனைவருக்கும் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.* ஹைதராபாதில் சாலை விதிகளை மீறும் வாகன ஓட்டிகளுக்கு அபராதம் விதிக்கும் போலீசாருக்கு, சட்டையில்கேமரா பொருத்தும் திட்டம் முதன்முதலில் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தை, தமிழக போலீஸ் அதிகாரிகள் குழு ஆய்வு செய்தது. இக்குழு வழங்கிய அறிக்கையின் அடிப்படையில், சென்னை போலீசாருக்கும் சட்டையில் அணியும் கண்காணிப்பு கேமரா விரைவில் வழங்கப்பட்டு உள்ளது.




காரைக்கால் மாவட்டம் கோட்டுச்சேரி கொம்யூன் பஞ்சாயத்திற்கு உட்பட்ட முக்கிய வீதிகள் மற்றும் பல்வேறு கடைகளில் ஒரு முறை பயன்படுத்தும் பிளாஸ்டிக் பொருட்களை அறவே தடுப்பது சம்பந்தமான ஒரு விழிப்புணர்வு நிகழ்வு கோட்டுச்சேரி கொம்யூன் பஞ்சாயத்து மற்றும் ஹெச் ஆர் ஸ்கொயர் நிறுவனமும் இணைந்து இந்நிகழ்வினை நடத்தினார்கள். மேலும் ஒவ்வொரு கடைகளிலும் ஒரு முறை பயன்படுத்தும் பிளாஸ்டிக் பொருட்களை இங்கே விற்க மாட்டோம் என அறிவிப்பு பலகைகள் வைக்க வேண்டும் எனவும் பொதுமக்கள் வரும் பொழுது துணிப்பையை எடுத்து வர வேண்டும் எனவும் விழிப்புணர்வு நிகழ்வு நடைபெற்றது. இந்நிகழ்வில் ஆணையர் சிவனேசன் மற்றும் எச்.ஆர் ஸ்கொயர் நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள் உடன் இருந்தனர்.

# நெடுவாசல் கிராமத்தில் கூரை வீடு எரிந்து சேதம் எம்எல்ஏ நிவேதா முருகன் பாதிக்கப்பட்டவருக்கு நிவாரணம் வழங்கினார்



தரங்கம்பாடி, செப்- 28:
மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி தாலுக்கா, நெடுவாசல்ஊராட்சிப்பட்டவரம் கிராமத்தை சேர்ந்தவர் சிவகுமார் என்பவருக்கு சொந்தமான கூரை வீட்டில் ஆந்திர மாநிலத்தை சேர்ந்த நாகார்ஜூன் (35) அவரது மனைவி லட்சுமி (30) ஆந்திரா இவர்கள், கடந்த 12 ஆண்டுகளாக பட்டவரம் கிராமத்தில் தங்கி தாய்ப்பாய் வியாபாரம் செய்து வருகிறார்.
இந்நிலையில் நாகர்ஜுன் வசித்து வந்த கூரை வீடு மின்கசிவு காரணமாக திடீரென தீப்பிடித்து எரிந்ததாக கூறப்படுகிறது. இந்த விபத்தில் வீட்டிலிருந்த மின்சாதன பொருட்கள், பீரோ, கட்டில் மற்றும் சுமார் ரூ.20 ஆயிரம் தீயில் கருகி முழுவதும் சேதமடைந்தது. அது சமயம் அக்கம் பக்கத்தினர் தீயை அணைக்க முயன்றும் முடியாமல் முழுவதும் எரிந்து சேதம் அடைந்தது.
தகவல் அறிந்த பூம்புகார் சட்டமன்ற உறுப்பினரும் மயிலாடுதுறை மாவட்ட திமுக செயலாளருமான நிவேதா எம்.முருகன், தீ விபத்தில் பாதிக்கப்பட்ட குடும்பத்தினரை நேரில் சந்தித்து ஆறுதல் கூறினார். பின்னர் தனது சொந்த நிதியில் ரூ.5 ஆயிரம் மற்றும் அத்தியாவசிய பொருட்களையும், அரசின் சார்பில் ரூ5 ஆயிரம் மற்றும் நிவாரண உதவிகளை வழங்கினார்.
அப்போது தரங்கம்பாடி வட்டாட்சியர் சரவணன், திமுக தஞ்சை மண்டல தகவல் தொழில்நுட்ப அணி பொறுப்பாளர் ஸ்ரீதர், செயலாளர் அப்துல்மாலிக், ஒன்றியக்குழு துணை தலைவர் மைனர் பாஸ்கர், ஒன்றிய கவுன்சிலர் ஷகிலா அஜீஸ், ஊராட்சி மன்ற தலைவர் உமாராணி, துணைத் தலைவர் பெரியதம்பி, வருவாய் ஆய்வாளர் கண்ணதாசன், கிராம நிர்வாக அலுவலர் சௌரிராஜன் மற்றும் திமுக நிர்வாகிகள் உள்ளிட்டோர் உடனிருந்தனர்

# அனந்தபுரி எக்ஸ்பிரஸ் அதிவிரைவு ரயிலாக மாற்றம்



சென்னை, செப்.28
தமிழ்நாடு, கேரளாவை இணைக்கும் அனந்தபுரி எக்ஸ்பிரஸ், வரும் அக்டோபர் 1ஆம் தேதி முதல் அதிவிரைவு ரயிலாக மாற்றி இயக்கப்பட உள்ளது.
இந்த ரயில், சென்னை எழும்பூரில் இருந்து இரவு 8.10 மணிக்கு பதிலாக இரவு 7.50 மணிக்கு புறப்படும். திருச்சிக்கு 1.05 மணிக்கும், மதுரைக்கு 3.20 மணிக்கும், நெல்லைக்கு 6.05 மணிக்கு சென்றடையும்.
கொல்லத்துக்கு மறுநாள் காலை 11.15 மணிக்கு சென்றடையும். அதே போல், கொல்லத்தில் இருந்து மதியம் 2.50 மணிக்கு புறப்பட்டு, சென்னைக்கு மறுநாள் காலை 6.05 மணிக்கு வந்தடையும் என தெற்கு ரயில்வே தெரிவித்துள்ளது.



▶ புதுவை அரசு காரைக்கால் மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை சில நாட்களில் துவங்குவதை முன்னிட்டு மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் மேற்கொள்ளப்பட வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து போக்குவரத்து துறை அமைச்சர் சந்திர பிரியங்கா , தலைமையில் மாவட்ட ஆட்சியரகத்தில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் காரைக்கால் மாவட்ட ஆட்சியர் குலோத்துங்கன், முன்னிலையிலும் துணை மாவட்ட ஆட்சியர் (வருவாய்) ஜான்சன் துணை மாவட்ட ஆட்சியர் (பேரிடர் மேலாண்மை) வெங்கடகிருஷ்ணன் காவல் கண்காணிப்பாளர் (தெற்கு) சுப்பிரமணியன் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை, வருவாய்த்துறை, பொதுப்பணித்துறை, நலவழித்துறை, சமூக நலத்துறை, சுகாதாரத்துறை, காரைக்கால் நகராட்சி நிர்வாகம், அனைத்து கொம்யூன் பஞ்சாயத்து ஆணையர்கள், தீயணைப்புத்துறை, உள்ளிட்ட துறை அதிகாரிகள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டார்கள். இந்நிகழ்வில் பேசிய அமைச்சர் சென்ற ஆண்டை போலவே அதிகாரிகள் இந்த ஆண்டும் மிகவும் சிறப்பாக செயல்பட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

# ஆரணி ஆறு மற்றும் கோசத்தலை ஆற்றில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால் தரைப் பாலங்கள் நீரில் மூழ்கியது





ஊத்துக்கோட்டை, செப்28-
தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் கடந்த சில நாட்களாக பகல் நேரங்களில் கடும் வெயில் வாட்டி வதைக்கின்றது. மாலை நேரமானால் மேகமூட்டத்துடன் இடி-மின்னலுடன் பலத்த மழை பெய்து வருகிறது.
இந்நிலையில், பூண்டி ஏரியின் முழு கொள்ளளவு எட்டியதை தொடர்ந்து உபரி நீர் வினாடிக்கு 2,500 கன அடி திறந்து விடப்பட்டுள்ளது. இதனால் கொசத்தலை ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. கொசத்தலை ஆற்றின் குறுக்கே உள்ள மெய்யூர் தரைப்பாலம் நீரில் மூழ்கியது.
எனவே, மெய்யூரில் இருந்து திருவள்ளூர் நோக்கி செல்லும் வாகனங்கள் பல கிலோமீட்டர் தூரம் சுற்றிக்கொண்டு சீத்தஞ்சேரி வழியாக சென்று வந்தது. இந்நிலையில், தரைப்பாலம் அருகே புதியதாக கட்டி வரும் மேம்பாலம் தற்காலிக போக்குவரத்துக்கு பயன்படுத்திக்கொள்ள நெடுஞ்சாலை துறை அதிகாரிகள் அனுமதித்தனர்.
இதனால் இந்த மேம்பாலத்தில் வாகனங்கள் சென்று வருகிறது. இதேபோல் ஆரணி ஆற்றில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கால் பெரியபாளையம் அருகே அஞ்சாத்தம்மன் கோவில்-புதுப்பாளையம் தரை பாலம் நீரில் மூழ்கியது. சுமார் ஒரு அடிக்கும் மேலாக இப்பாலத்தின் மீது தண்ணீர் பாய்ந்து செல்கிறது. ஆபத்தை உணராமல் இந்தப் பாலத்தின் மீது பொதுமக்கள் சென்று வருகின்றனர்.
இதேபோல் ஆரணி- மங்கலம் இடையே ஆரணி ஆற்றில் அமைக்கப்பட்ட தற்காலிக நடைபாதை நீரில் மூழ்கியது. இதனால் பள்ளி செல்லும் மாணவ-மாணவிகள், வியாபாரிகள், தனியார் மற்றும் அரசு துறைக்கு வேலைக்கு செல்வோர் ஆபத்தை உணராமல் இந்தப் பாதையில் சென்று வருகின்றனர். எனவே, சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் போர்க்கால அடிப்படையில் நடவடிக்கைகளை மேற்கொண்டு இப்பகுதியில் மேம்பாலம் கட்டித்தர வேண்டும் என சமூக ஆர்வலர்களும், பொதுமக்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# மயிலாடுதுறையில் வெல்ஸ்பன் நிறுவனத்தின் முதலுதவி பயிற்சி பட்டறை முகாம்



மயிலாடுதுறை, செப்- 28:
மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி தாலுகா சட்டநாதபுரம் - நாகப்பட்டினம் நான்கு வழி சாலைபணியில் ஈடுபட்டுவரும் வெல்ஸ்பன் நிறுவனத்தின் சமூக பொறுப்புணர்வு பிரிவு சார்பில் மயிலாடுதுறை வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் முதலுதவி மற்றும் சாலை பாதுகாப்பு நிகழ்ச்சி மயிலாடுதுறை மாவட்ட நெடுஞ்சாலை கட்டுமானம் மற்றும் பராமரிப்பு கோட்ட பொறியாளர் பாலசுப்பிரமணியன் தலைமையில் நடைபெற்றது.
வட்டாரப் போக்குவரத்து அலுவலர் முருகன், மோட்டார் வாகன ஆய்வாளர் ராம்குமார், மயிலாடுதுறை உதவி காவல் ஆய்வாளர் முகிலரசு ஆகியோர் முன்னிலை வகித்தனர். வெல்ஸ்பன் நிறுவனத்தின் சமூக பொறுப்புணர்வு அலுவலர் ஜூலியஸ் தாய மணி வரவேற்று பேசினார். வெல்ஸ்பன் நிறுவனத்தின் மூத்த மேலாளர் கோபிராஜ் மற்றும் பாதுகாப்பு அலுவலர் மணிமாறன் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.
முகாமில் இந்தியன் ரெட் கிராஸ் சொசைட்டி மாவட்ட செயலாளர் கிருபாகரன் தலைமையில், ரெட் கிராஸ் தலைமை பயிற்சியாளர் பெஞ்ஜமின் முதல் உதவி குறித்து செயல்முறை விளக்கம் அளித்தார், முகாமில் சுமார் 100-க்கும் மேற்பட்ட வாகன ஓட்டிகள் கலந்து கொண்டு முதலுதவியை செயல்முறை விளக்கத்தை கேட்டும், பார்த்தும் தெரிந்து கொண்டனர். முகாமில் வட்டாரப் போக்குவரத்து அலுவலக ஊழியர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

காவேரி நீரை திறந்து விடாத கர்நாடகா அரசை கண்டித்து

# மூவேந்தர் முன்னேற்றக் கழகத்தினர் நந்தி பகவானுக்கு மனு அளித்தனர்



மயிலாடுதுறை, செப்- 28:
காவிரியில் தண்ணீர் திறக்காத கர்நாடக அரசை கண்டித்து மயிலாடுதுறை மாவட்ட மூவேந்தர் முன்னேற்ற கழகம் சார்பில் காவிரி ஆற்றில் இறங்கி கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.
மயிலாடுதுறை நகரின் மையப்பகுதியில் அமைந்துள்ள புகழ்பெற்ற காவிரி துலா கட்டத்தில் ஏராளமான நிர்வாகிகள் கர்நாடக அரசை கண்டித்தும், தண்ணீர் பெற்றுத்தராத தமிழக அரசிற்கு எதிராகவும் கோஷங்களை எழுப்பினர். மூவேந்தர் முன்னேற்றக் கழகத்தின் மாநில இளைஞரணி துணைச் செயலாளர் கில்லி பிரகாஷ் தலைமையில் நடைபெற்றது.
இந்த ஆர்ப்பாட்டத்தில் விவசாயிகள் தண்ணீர் கிடைக்காமல் தற்கொலை செய்யும் சூழலுக்கு தள்ளப்படுவதால் உடனடியாக தமிழகத்திற்கு உரிய நீரை பெற்று தர வேண்டும் எனவும் , கர்நாடகாவில் தமிழக ஓட்டுநர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவத்திற்கு கண்டனம் தெரிவித்து கையில் கட்சிக் கொடியை பிடித்தவாறு கோஷங்கள் எழுப்பி ஆர்ப்பாட்டம் நடத்தினர்.
தொடர்ந்து துலாகட்டத்தின் நடுவே அமைந்துள்ள நந்தி பகவானுக்கு கோரிக்கை மனுவினை அளித்தனர். ஆர்ப்பாட்டத்தில் மண்டல பொருளாளர் ஆதமங்கலம் செல்வம், நகர செயலாளர் பாபு, நகர அமைப்பாளர் நஜீர், ஒன்றிய செயலாளர் கார்த்தி உள்ளிட்ட ஏராளமான நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

ராணுவ வீரர்கள் தேர்வு வழக்கில் தவறான தகவல்

# பாதுகாப்புத் துறை மீது உயர் நீதிமன்றம் அதிருப்தி



மதுரை, செப். 28-
ராணுவ வீரர்கள் தேர்வு வழக்கில் நீதிமன்றத்துக்கு தவறான தகவல் அளித்ததாக பாதுகாப்புத் துறை மீது உயர் நீதிமன்றம் அதிருப்தி தெரிவித்துள்ளது.
நெல்லையைச் சேர்ந்த முத்து கிருஷ்ணன், வீரப்பன், ஈஸ்வரன் உள்பட 9 பேர் உயர் நீதிமன்றக்கிளையில் தாக்கல் செய்த மனு: திருச்சியில் நடைபெற்ற ராணுவ வீரர்கள் தேர்வில் தேர்ச்சி பெற்றோம். ஆனால், தேர்வுப் பட்டியலில் எங்கள் பெயர் இல்லை. இதுகுறித்து கேட்டதற்கு காலிப்பணியிடங்கள் இல்லை என்றனர். தேர்ச்சிபெற்றவர்களுக்கு பணி வழங்காதது சட்டவிரோதம். பணி நியமனத்தில் நடைமுறைகள் முறையாக பின்பற்றப்படவில்லை. எனவே, எங்களை தகுதியானவர்களாக அறிவித்து பணி வழங்க உத்தரவிட வேண்டும் என்று மனுவில் கூறப்பட்டிருந்தது. இந்த மனு ஏற்கெனவே விசாரணைக்கு வந்தபோது மத்திய அரசு பதிலளிக்க நீதிபதி உத்தரவிட்டிருந்தார்.
இந்த மனு நீதிபதி பட்டு தேவானந்த் முன்பு புதன்கிழமை விசாரணைக்கு வந்தது. அப்போது மத்திய அரசு தரப்பில் மூடி முத்திரையிட்ட உறையில் பதில் மனு தாக்கல் செய்யப்பட்டது.
இதையடுத்து நீதிபதி, மத்திய அரசின் வழக்கறிஞர் நீதிமன்றத்தில் அளித்த தகவல்கள் அனைத்தும் தவறானது. தவறான தகவல்களை மூடி முத்திரையிட்ட உறையில் அளித்துள்ளீர்கள். அரசு வழக்கறிஞர்களிடம் சில அதிகாரிகள் அளிக்கும் தகவல்கள் தவறாகவே இருக்கின்றன. சில அதிகாரிகள் நீதிமன்றத்துக்கு சரியான தகவல்களை அளிப்பதில்லை என்றார்.
தொடர்ந்து மத்திய அரசு வழக்கறிஞர், கம்ப்யூட்டரில் பதிவான தகவல்கள் நீதிமன்றத்துக்கு தரப்பட்டுள்ளது. இந்தியா முழுவதும் இதே முறை தான் பின்பற்றப்படுகிறது என்றார்.
இதனை ஏற்க மறுத்த நீதிபதி, நாட்டை பாதுகாக்கும் பணியில் ஈடுபடும் பாதுகாப்புத் துறையைச் சேர்ந்த அதிகாரிகளே நீதிமன்றத்துக்கு தவறான தகவல்களை அளிக்கலாமா? இப்படியிருக்கும்போது பாதுகாப்பு எந்த அளவில் இருக்கும்? பாதுகாப்புத் துறையின் சிஸ்டம் சரியில்லை. வழக்கில் உரிய உத்தரவு பிறப்பிக்கப்படும் என உத்தரவிட்டார்.

# பெருவாயல் டி.ஜெ.எஸ் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் தேசிய அளவிலான ஒரு நாள் பயிலரங்கம் நடைபெற்றது





ஊத்துக்கோட்டை, செப்28-
திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி ஒன்றியம், கவரப்பேட்டை, பெருவாயலில் டி.ஜெ.எஸ் கலை மற்றும் அறிவியல் கல்லூரி இயங்கி வருகிறது. இக்கல்லூரியில் தேசிய அளவிலான ஒரு நாள் பயிலரங்கம் கல்லூரி வளாகத்தில் நேற்று நடைபெற்றது.
இந்நிகழ்ச்சிக்கு, கல்லூரியின் முதல்வர் முனைவர் வி.லட்சுமிபதி தலைமை தாங்கினார். இதில், பொன்னேரி எல்.என்.ஜி கல்லூரியின் உதவி பேராசிரியரும், பொருளியல் துறை தலைவருமான டாக்டர் பி.எழிலரசு சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றி மாணவர்களை ஊக்குவித்து பேசினார்.
இதில், ஆர்.எம்.கே கல்லூரி, பார்த்சியன் கல்லூரி, புதிய கல்லூரி உள்ளிட்டவைகளை சேர்ந்த 200-க்கும் மேற்பட்ட மாணவர்கள் பயிலரங்கங்கில் கலந்து கொண்டனர். மேலும், பிலிப்பைன்ஸ், யு.எஸ்.ஏ, ஸ்காட்லாந்து, யு.கே,கனடா, தென்கொரியா, தாய்லாந்து உள்ளிட்ட பல்வேறு வெளிமாநிலங்களை நாடுகளைச் சேர்ந்தவர்களும், கேரளா, கர்நாடகா உள்ளிட்ட வெளிமாநிலங்களை சேர்ந்தவர்களும் காணொளி காட்சி மூலம் மாணவர்களை ஊக்குவித்து, தங்களது கருத்துக்களை வழங்கி வாழ்த்தி பேசினர்.
இந்நிகழ்ச்சியில், ஆங்கிலத்துறை பேராசிரியர் டாக்டர் பிரேமகுமாரி மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார். மாணவிகள் ஐஸ்ரொசெண்ட், மதுமிதா ஆகியோர் பாடல்களை பாடி மாணவர்களை மகிழ்வித்தனர். முன்னதாக மாணவி கீர்த்திகா வரவேற்பு பாடலை பாடி அனைவரையும் மகிழ்வித்தார். நிகழ்ச்சியின் நிறைவாக தமிழ் துறை உதவி பேராசிரியர் விஜயன் நன்றி கூறினார். பொருளியல் துறையின் பேராசிரியர் டாக்டர் பிபுவனேஸ்வரி நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார்.

# சீர்காழியில் கந்துவட்டி புகாரில் தலைமறைவாக இருந்தவர் கைது. போலீசார் விசாரணை




▶ வினோத்குமார். கைது செய்யப்பட்ட நபர்

சீர்காழி, செப். 28-
சீர்காழி தாடாளன் வடக்கு வீதியில் வசித்து வருபவர் ராஜா. இவர் சீர்காழி கொள்ளிடம் முக்கூட்டு பகுதியில் வினோத் பைனான்ஸ் உரிமையாளர் வினோத்குமார் என்பவரிடம் கடந்த 12.06.22 அன்று ரூ3 லட்சம் பணம் கடனாக வாங்கி உள்ளார்.
கடனாக பெற்ற தொகைக்கு ஒரு நாளைக்கு 3000 ரூபாய் வட்டி வீதம் ஓராண்டுக்கு 9 லட்சத்திற்க்கு அதிகமாக கொடுத்துள்ளார். வாங்கிய தொகையை விட வட்டி அதிகமாக செலுத்தியும் மீண்டும் வட்டி கேட்டு வினோத்குமார் அசிங்கமாக திட்டியும், அடித்துள்ளதாகவும் தன்னுடைய டாடா ஏசி வாகனம் மற்றும் செல்போனை எடுத்து சென்று விட்டதாகவும் சீர்காழி காவல்நிலையத்தில் புகார் அளித்துள்ளார்.
இதனை அடுத்து புகாரை பெற்ற காவல்துறையினர் உரிய விசாரணை செய்து வழக்குப்பதிவு செய்து தலைமறைவாக இருந்த வினோத்குமாரை கைது செய்தனர்.
கைது செய்யப்பட்ட வினோத்குமாரின் மீது இரண்டு கந்துவட்டி வழக்குகளும் ஒரு குட்கா வழக்கும் உள்ளது குறிப்பிடத்தக்கது.

ஆரணி பேரூராட்சிமன்ற கூட்டத்தில்

# மகளிர் உரிமைத் தொகை வழங்கிய தமிழக முதல்வருக்கு நன்றி தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது





ஊத்துக்கோட்டை, செப்28-
திருவள்ளூர்மாவட்டம் சோழவரம் ஒன்றியம் ஆரணி பேரூராட்சிமன்ற கூட்டம்மன்றவளாகத்தில் நேற்று நடைபெற்றது.
இக்கூட்டத்துக்கு, பேரூராட்சி மன்ற தலைவர் ராஜேஸ்வரி தலைமை தாங்கினார். துணைத்தலைவர் கே.சுகுமார், செயல் அலுவலர் (பொறுப்பு) எம்.பாஸ்கரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.
இக்கூட்டத்தில், தமிழக அரசு தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில் செப்டம்பர்மாதம்15-ம்தேதி முதல் மகளிர்க்கு உரிமை தொகை வழங்கியதற்கு நன்றி தெரிவிப்பது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. இக்கூட்டத்தில், நியமன குழு உறுப்பினர் டி.கண்ணதாசன் உள்ளிட்ட பேரூராட்சி மன்ற உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.
மன்ற பொருட்களை இளநிலை உதவியாளர் குப்பன் வாசித்தார். முன்னதாக பேரூராட்சி மன்றம் அருகே அங்கன்வாடி மைய கட்டிடம் கட்டுவதற்கான அடிக்கல் நாட்டு விழா நிகழ்ச்சி நடைபெற்றது. இதில், சிறப்பு அழைப்பாளராக பொன்னேரிசப்-கலெக்டர் ஐஸ்வர்யாகலந்துகொண்டு பூமிபூஜைவழிபாடுவைதுவக்கி வைத்தார்.



▶ திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருவெறும்பூர் எறும்பீஸ்வரர் திருக்கோயில் வளாகத்தில் நேற்று உலக சுற்றுலா தினத்தை முன்னிட்டு சுற்றுலாத் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் மா.பிரதீப் குமார் தூய்மை பணிகளை மேற்கொண்டு தூய்மை பணிகளை தொடங்கி வைத்தார். அதனைத் தொடர்ந்து திருக்கோயில் நந்தவனத்தில் மரக் கன்றுகளை நட்டு வைத்தார்.

காலாண்டு தேர்வு நடைபெறும் நேரத்தில்

# 7 ஆசிரியர்கள் ஒரே நேரத்தில் விடுமுறை, பெற்றோர்கள் பள்ளி முன்பு திடீர் ஆர்ப்பாட்டம்






வைத்தீஸ்வரன்கோவில். செப்.28
மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி அடுத்த வைத்தீஸ்வரன் கோயிலில் அரசினர் மேல்நிலைப்பள்ளி இயங்கி வருகிறது. இங்கு சுமார் 400க்கு மேற்பட்ட மாணவமாணவிகள் கல்வி பயின்று வருகின்றனர்.
இப்பள்ளியில் தலைமை ஆசிரியர் உள்ளிட்ட 17 க்கும் மேற்பட்ட ஆசிரியர் ஆசிரியைகள் பணியாற்றி வருகின்றனர். இந்நிலையில் பள்ளியின் தலைமை ஆசிரியராக பணியாற்றிய பிச்சைமணி என்பவர் பணி மாறுதலில் வேதாரண்யம் வட்டத்தில் உள்ள ஒரு பள்ளிக்கு சென்றார்.
இதனை அடுத்து பணி மாறுதலில் சென்ற ஆசிரியரை வழி அனுப்பி வைப்பதற்காக பள்ளியில் உள்ள 7 ஆசிரியர்கள் பள்ளிக்கு வராமல் வெளியூர் சென்றனர். காலாண்டு தேர்வு நடைபெறும் நேரத்தில் ஒரே நாளில் ஏழு ஆசிரியர்கள் திடீரென பள்ளிக்கு விடுப்பு எடுத்து பணிமாறுதலில் சென்ற ஆசிரியரை வழி அனுப்பிட சென்றதால் பெற்றோர்களிடையே அதிருப்தி ஏற்பட்டது.
இதனால் அதிர்ச்சி அடைந்த பெற்றோர்கள் மற்றும் முன்னாள் மாணவர்கள், பொதுமக்கள் திடீரென பள்ளியின் முன்பு கண்டன முழக்கங்கள் எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.
இதனால் பரபரப்பு ஏற்பட்டது. இதனை அடுத்து மாவட்ட கல்வித்துறை அதிகாரிகள் பள்ளிக்கு நேரடியாக வந்து பள்ளிக்கு வராமல் சென்று ஆசிரியர்கள் குறித்து விசாரணை நடத்தினர்.

# பள்ளி முதல்வர் மீதான நடவடிக்கை திரும்ப பெற ஆசிரியர் கூட்டமைப்பு வலியுறுத்தல்



**புதுக்கோட்டை, செப். 28-**

புதுக்கோட்டை அரசு முன்மாதிரி மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் மீதான நடவடிக்கையை திரும்ப பெற புதுக்கோட்டை மாவட்ட அனைத்து ஆசிரியர் சங்கங்கள் கூட்டமைப்பு வலியுறுத்தியுள்ளது. இது குறித்து அந்த அமைப்பின் நிர்வாகிகள் மாவட்ட கலெக்டர் மெர்சி ரம்யாவுக்கு அளித்திருக்கும் மனுவில் கூறியிருப்பதாவது:

தமிழ்நாட்டில் கல்வி நிலையங்களில் சமூக கலாச்சார சீரழிவுக்கு உட்பட்டிருக்கும் மாணவர்களை நெறிப்படுத்துவதற்கு தமிழக அரசும் பள்ளிக்கல்வித்துறையும், இந்தக் கல்வி ஆண்டின் தொடக்கத்தில் வெளியிட்டுள்ள வழிகாட்டுநெறிமுறைகளை பின்பற்றி சமரசமற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது, மாணவர்கள் சில தகாத எதிர்வினைகளில் ஈடுபடுகிறார்கள். மாணவர்களை நல்வழிப்படுத்தும் நிகழ்வுகளில், எதிர்பாராத நிலையில் மனவெழுச்சியின் காரணமாக மாணவர்கள் தம்மை தவறான செய்கைக்கு உட்படுத்திக்கொள்ளும் நிலையில், ஆசிரியர்கள் மீது, ஒழுங்கு நடவடிக்கை என்பது இயல்பானதாகிவிட்டது, இச்செயல் கற்பித்தல் பணியோடு மாணவர்களின் ஒழுக்கம் சார்ந்தநெறிப்படுத்துதலை செய்யும் ஆசிரியர்களுக்கு இது தேவையற்ற செயல் என்ற எண்ணத்தை ஏற்படுத்துகிறது, எனவே வருங்கால சமூகத்திற்கு நல்ல குடிமகன்களை உருவாக்கும் ஆசிரியர்களின் செயலுக்கு இடையூறு ஏற்படா வண்ணம், இனி வருங்காலத்தில் ஒழுங்கு நடவடிக்கைகளை முறைமைப்படுத்திட உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுகிறோம்.

புதுக்கோட்டை மச்சுவாடி அரசுமுன்மாதிரி மேல்நிலைப்பள்ளி மேல்நிலை வகுப்பு மாணவன் சந்தேக மரணமடைந்ததைத் தொடர்ந்து புற அழுத்தத்தின் காரணமாக தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டுள்ள தலைமையாசிரியர் சிவப்பிரகாசத்தின் தற்காலிக பணிநீக்கத்தை உடனடியாக ரத்து செய்ய வேண்டும் என கேட்டுக் கொள்கிறோம். பள்ளிகளில் சமூக விரோதிகளால் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் ஏற்படும் பாதிப்புகளை தடுக்க ஆசிரியர் பணி பாதுகாப்பு சட்டத்தை உருவாக்கி பள்ளிகளில் அத்துமீறும் சமூக விரோதிகளின் மீது கடும் நடவடிக்கை எடுத்து கற்பித்தல் பணி சுதந்திரமாகமேற்கொள்ள ஆசிரியர்களுக்கு உரிய சட்டப் பாதுகாப்பை வழங்கிட அரசை கேட்டுக்கொள்கிறோம்

மாணவர்களின் நெறிபிறழ் நடத்தைகளை முறைப்படுத்திட ஆசிரியர், பெற்றோர், காவல்துறை, வருவாய்த்துறை, மருத்துவத்துறை உள்ளிட்ட அனைத்து துறை சார்பில் கண்காணிப்புக்குழு ஏற்படுத்திபள்ளி,வட்டார, மாவட்ட அளவில் கண்காணிப்புக்குழு அமைக்க வேண்டும் என அனைத்து ஆசிரியர் இயக்கங்களின் கூட்டமைப்பு சார்பாக கேட்டுக்கொள்கிறோம். என்று அதெரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



தமிழ்நாடு நர்சரி, பிரைமரி, மெட்ரிக் மேல்நிலை மற்றும் சிபிஎஸ்இ பள்ளிகள் சங்கத்தின் சார்பில் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் முன்பு மாணவர்களை நெறிப்படுத்தும் ஆசிரியர்களை குற்றவாளிகளாக்கி தண்டனை வழங்குவதை கைவிட வேண்டும் ஆசிரியர்களுக்கு பணி பாதுகாப்பு சட்டத்தை உருவாக்கிட வேண்டும், பள்ளிகளில் சமூக விரோதிகளால் ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் ஏற்படும் பாதிப்புகளை தடுக்க சட்டம் இயற்ற வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை தனியார் பள்ளி சங்க நிர்வாகிகளும் மாவட்டத் தலைவர் ராமசாமி, மாவட்ட செயலாளர் சண்முகநாதன், மாவட்ட பொருளாளர் குமரன்' புதுக்கோட்டை கல்வி மாவட்ட பொறுப்பாளர் கிருஷ்ணமூர்த்தி உள்ளிட்ட பலர் பங்கேற்று முழக்கங்களை எழுப்பினர்.



தலைமைச் செயலகத்தில், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் முத்துசாமி தலைமையில் நகர் ஊரமைப்பு துறை மற்றும் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்ட பணிகள் குறித்த ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர் அபூர்வா, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் சரவணவேல்ராஜ், நகர் ஊரமைப்பு இயக்ககத்தின் இயக்குநர் கணேசன், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### சென்னை ராஜீவ்காந்தி மருத்துவமனையில்

# இதய பரிசோதனைக்காக வந்தவருக்கு கை அகற்றம்: எடப்பாடி பழனிசாமி கண்டனம்

சென்னை, செப். 28-

சென்னை ராஜீவ்காந்தி மருத்துவமனையில் இதய பரிசோதனைக்காக வந்தவருக்கு கை அகற்றப்பட்ட சம்பவத்துக்கு எடப்பாடி பழனிசாமி கண்டனம் தெரிவித்து உள்ளார்.



சென்னை ராஜீவ்காந்தி மருத்துவமனையில் இதய பரிசோதனைக்காக வந்த பெண்ணிற்கு முறையான சிகிச்சை அளிக்காததன் காரணமாக கை அகற்றப்பட்ட சம்பவத்துக்கு அதிமுக பொதுச்செயலாளரும் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான எடப்பாடி பழனிசாமி கண்டனம் தெரிவித்து உள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள டுவிட்டர் (எக்ஸ்) பதிவில் தெரிவித்து இருப்பதாவது : சென்னை ராஜீவ்காந்தி மருத்துவமனையில் இதய பரிசோதனைக்காக வந்த ஜோதி என்ற பெண்ணிற்கு முறையான சிகிச்சை அளிக்காததன் காரணமாக கை அகற்றப்பட்டதாக செய்திகள் வருகின்றன.

கடந்த ஆண்டு தவறான சிகிச்சையால் கால்பந்து வீராங்கனை பிரியா உயிரிழந்தசம்பவம் மற்றும் கடந்த சில மாதங்களுக்கு முன்பாக இதே ராஜீவ்காந்தி அரசு மருத்துவமனையில் இந்த திமுக அரசின் அலட்சியத்தால் கை அகற்றப்பட்ட குழந்தை உயிரிழந்த சம்பவமும் ஏற்படுத்திய காயமே இன்னும் ஆறும் முன்னர் மீண்டும் இது போன்ற ஒரு துயர சம்பவம் நடந்திருப்பது, அலட்சியமும் அக்கறையின்மைக்கும் உதாரணமாக இருக்கும் இந்த திமுக அரசு அனைத்து துறைகளிலும் தோல்வியுற்றது என்பதற்கான பெரும் எடுத்துக்காட்டு.

மக்களை காக்கும் கடமையில் இருந்து இந்த அரசு ஒவ்வொரு நாளும் தவறிச் செல்வதை வன்மையாக கண்டிப்பதுடன், அரசின் தவறான சிகிச்சையால் தனது கையை இழந்து தவிக்கும் ஜோதிக்கு உடனடியாகஉரியசிகிச்சை வழங்கவும், அவருக்கு தக்க இழப்பீடு வழங்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் இந்த திமுக அரசின் முதல்வரை வலியுறுத்துகிறேன் என்று எடப்பாடி பழனிசாமி தனது டுவிட்டர் (எக்ஸ்) பதிவில் தெரிவித்து உள்ளார்.

# கந்தர்வகோட்டை அருகே அரசுப் பள்ளியில் சுற்றுச்சூழல் மன்றம் சார்பில் உலக பசுமை நுகர்வோர் தினம் கடைபிடிப்பு



கந்தர்வகோட்டை, செப் .28-

புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வகோட்டை ஒன்றியம் அக்கச்சிப்பட்டி நடுநிலைப் பள்ளியில் உலக பசுமை நுகர்வோர் தினம் கடைபிடிப்பு. இந்நிகழ்வினை தலைமை ஆசிரியர் தமிழ்செல்வி அனைவரையும் வரவேற்றார், சுற்றுச்சூழல் மன்ற ஒருங்கிணைப்பாளர் மணிமேகலை ஒருங்கிணைத்தார்,

இந்நிகழ்வில் கலந்து கொண்ட இல்லம் தேடி கல்வி மைய ஒன்றிய ஒருங்கிணைப்பாளர் ரகமதுல்லா உலக பசுமை நுகர்வோர் தினம் குறித்து பேசியதாவது,

பிளாஸ்டிக்பைகளைப் பயன்படுத்துவதால் சுற்றுச்சூழல் பாதிக்கப்படுகிறது, ஆகவே இயற்கையான பொருட்களையே பயன்படுத்த வேண்டும். நாம் பயன்படுத்தக்கூடிய பொருட்கள் மறுசுழற்சிக்கு உகந்ததாக இருக்க வேண்டும். உலகின் பல பகுதிகளில் பசுமை நுகர்வோர் அமைப்பு மக்களிடம் பசுமையைப் பாதுகாக்க விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிறது, செப்டம்பர் 28ஐ பசுமை நுகர்வோர் தினமாக கொண்டாடி வருகிறது,மீண்டும்எளிதில் புதுப்பிக்க முடியாத இயற்கை வளங்களைப் பயன்படுத்தித்தான் நாம் அனைவரும் வாழ்ந்து வருகிறோம். முடிந்தவரை பிளாஸ்டிக்பைகளை தண்ணீர் பாக்கெட்கள் மறுசுழற்சிக்கு உட்படுத்த முடியாத பிளாஸ்டிக் பொருட்களை தவிர்க்க ஒவ்வொருவரும் துணிப்பைகளை பயன்படுத்தனக்குள்ளே உறுதி எடுத்துக்கொள்ள வேண்டும் என்று பேசினார்.

இந்நிகழ்வில் ஆசிரியர்கள் சிந்தியா, செல்விஜாய்,தனலெட்சுமி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# பொன்மாரி கல்வியியல் கல்லூரியில் 18 ஆம் ஆண்டு வகுப்பு தொடக்க விழா

**புதுக்கோட்டை, செப். 28-**



புதுக்கோட்டை பொம்மாடிமலை பொன்மாரி கல்வியியல் கல்லூரியில் 18 ஆம் ஆண்டு வகுப்பு தொடக்க விழா நடைபெற்றது. இதில் பொன்மாரி கல்வி நிறுவனங்களின் தலைவர் மருத்துவர் ராமதாஸ் தலைமை வகித்தார்.

கல்லூரியின் முதல்வர் உமா வரவேற்புரை ஆற்றினார், சிறப்பு அழைப்பாளராக பட்டிமன்ற பேச்சாளர் கவிஞர் மகா சுந்தர் கலந்து கொண்டு வகுப்புகளைத் தொடங்கி வைத்து ஆசிரியர்களால் சமூக மாற்றத்தை ஏற்படுத்த முடியும், ஆசிரியர்கள் வாசிப்பு பழக்கத்தை அதிகப்படுத்த வேண்டும், ஆசிரியர்கள் மாணவர்களின் மனநிலையை அறிந்து அவர்களின் நலனுக்காக செயல்பட வேண்டும் என பல்வேறு கருத்துகளை வழங்கி சிறப்புரையாற்றினார்.

பொன்மாரி கல்வி நிறுவனங்களின் மேலாண்மை இயக்குநர் சொக்கலிங்கம், மற்றும் பொன்மாரி கல்வி நிறுவனங்களின் செயலாளர் சத்தியராம் இராமுக்கண்ணு, அறங்காவலர்கள் நிலவை பழனியப்பன், லெட்சுமணன் ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார்கள், கல்லூரியின் முதல்வர் (பொ) இராஜலிங்கம் நன்றியுரை வழங்கினார், உதவி பேராசிரியர் மாரிமுத்து நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கினார், மற்றும் உதவி பேராசிரியர்கள் தயாகருண், சந்திரசேகர், பூபதி ராஜு, ஆல்பிரட் பிராங்கிளின், மக்கள் தொடர்பு அலுவலர் ஜெகன், அலுவலக பணியாளர்கள், மாணவ மாணவியர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# "அனைத்து நதிகளையும் இணைப்பதே காவிரி பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு" பிரேமலதா விஜயகாந்த்

தஞ்சாவூர், செப். 28-

காவிரி பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு ஏற்பட வேண்டுமானால், இந்தியாவில் உள்ள அனைத்து நதிகளையும் இணைக்க வேண்டும் என்று தேமுதிக பொருளாளர் பிரேமலதா விஜயகாந்த் தெரிவித்தார்.



காவிரி நீரைத் திறந்து விடாமல் தமிழக விவசாயிகளை வஞ்சிக்கும் கர்நாடக அரசைக் கண்டித்து தஞ்சாவூர் பனகல் கட்டிடம் அருகில் தேமுதிக சார்பில் உண்ணாவிரதப் போராட்டம் நேற்று நடைபெற்றது. இந்தப் போராட்டத்தைத் தொடங்கிவைத்த தேமுதிக பொருளாளர் பிரேமலதா விஜயகாந்த் பின்னர் செய்தியாளர்களிடம் கூறியது: ''பாஜகவும் அதிமுகவும் பிரிந்து 2 நாட்கள்தான் ஆவதால், இதனை பொறுத்திருந்து பார்ப்போம். அரசியலில் நிரந்தரஎதிரியும்கிடையாது, நிரந்தர நண்பரும் கிடையாது. அந்த இரு கட்சிகளுக்கும் இடையே பிரச்சனை கிடையாது. இரு தலைவர்கள் இடையேதான் பிரச்சனை. தேர்தலுக்கு இன்னும் 6 மாதங்கள் இருப்பதால், யார் தலைமையில் கூட்டணி அமையும் என்பதைப்பொறுத்திருந்து பார்க்கலாம். கூட்டணி தொடர்பான விஷயத்தில் தேமுதிக உரிய நேரத்தில் நல்ல முடிவை எடுக்கும்.

காவிரி பிரச்சினை 50 ஆண்டுகளாக நிலவி வருகின்றது. ஆனால், இதுவரை எந்தத் தீர்வு கிடைக்கவில்லை. பல பிரதமர்கள், முதல்வர்கள் வந்தாலும் ஆட்சி மாறியதே தவிர, காட்சிகள் மாறவில்லை. இப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காணத் தமிழக முதல்வரும், பிரதமரும் நடவடிக்கை எடுக்க வேண்டும். தமிழக முதல்வர் அனைத்து கட்சித் தலைவர்களையும் அழைத்துச் சென்று, பிரதமரை சந்திக்கவைத்து காவிரி நீரை பெற்றுத் தர வேண்டும்.

நாகை மாவட்டத்தைச் சேர்ந்த ராஜ்குமார் பயிர் வாடியதைக் கண்டு மாரடைப்பால் உயிரிழந்தார். அவரது மகளின் கல்விச் செலவுக்கு நிதி உதவியும், அவரது மனைவிக்கு அரசு வேலையும் வழங்கத் தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். காவிரி பிரச்சினை தொடர்பாகத் தமிழக ஆளுநரை சந்தித்து கோரிக்கை மனு அளிக்கவுள்ளோம். காவிரி பிரச்சினைக்குநிரந்தரதீர்வு ஏற்பட வேண்டுமானால், இந்தியாவில் உள்ள அனைத்து நதிகளையும் இணைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்'' எனத் தெரிவித்தார்.

### துணைவேந்தர் தேடுதல் குழு விவகாரத்தில்

# தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி தலையீட்டை கண்டிக்கிறோம் : முத்தரசன் கண்டனம்

சென்னை, செப். 28-

துணைவேந்தர் தேடுதல்குழுவிவகாரத்தில் தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி தலையீட்டை கண்டிக்கிறோம் என இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் முத்தரசன் கண்டனம் தெரிவித்துள்ளார்.



இது குறித்து அவர் வெளியிட்டுள்ள முகநூல் பக்கத்தில் கூறியதாவது, சென்னை பல்கலைக்கழக துணைவேந்தர் தேடுதல் குழுவை தமிழ்நாடு ஆளுநர் ஏற்கனவே அறிவித்திருந்தார். இக்குழுவில் உள்ள உறுப்பினர்களை நியமிக்கும்போது ஆளுநர் தமிழ்நாடு அரசை கலந்து ஆலோசிக்கவில்லை.

மேலும் இதுவரை இல்லாத நடைமுறையாக பல்கலைக்கழக மானிய குழுவின் பிரதிநிதியாகஎச்.சி.எஸ்.ரத்தூர் அவர்களை ஒரு உறுப்பினராக நியமனம் செய்தார். தமிழ்நாடு அரசு இந்த போக்கை வன்மையாக கண்டித்ததோடு, தமிழ்நாடு மாநில உயர்கல்வி செயலாளர், சென்னை பல்கலைக்கழக துணைவேந்தர் தேடுதல் குழுவில் இருந்து பல்கலைக்கழக மானிய குழு உறுப்பினர் ரத்தோர் நீக்கி அரசு இதழில் அறிவிப்பு வெளியிட்டார்.

தமிழ்நாடு ஆளுநர் தமிழ்நாடு அரசின் இந்த அறிவிப்பை திரும்ப பெறக் கோரி உயர்கல்வி செயலாளருக்கு உத்தரவிட்டுள்ளார். ஆளுநரின் இத்தகைய போக்கு மாநில அரசின் உரிமைகளில் தேவையற்ற தலையீட்டை உள்நோக்கத்தோடு செய்கிறார் என்பதைஉறுதி செய்கிறது. ஆளுநரின் இத்தகைய செயலை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில குழு வன்மையாக கண்டிக்கிறது. இப்பிரச்சனையில் மாநில அரசின் நிலைப்பாட்டுக்கு இந்தியக்கம்யூனிஸ்ட்கட்சி முழு ஆதரவளிக்கிறது என்று முத்தரசன் தெரிவித்துள்ளார்.

### ஆருத்ரா கோல்டு நிறுவன மோசடி வழக்கில்

# சிறப்பு நீதிமன்றத்தை நாட ஆர்.கே.சுரேஷுக்கு ஆணை

சென்னை : செப்.28-

ஆருத்ரா கோல்டு நிறுவன மோசடி வழக்கில் டி.என்.பி.ஐ.டீ. சிறப்பு நீதிமன்றத்தை நாட நடிகர் ஆர்.கே.சுரேசுக்கு சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவு அளித்துள்ளது.





வங்கி கணக்கு முடக்கத்தை எதிர்த்து டி.என்.பி.ஐ.டீ. சிறப்பு நீதிமன்றத்தை அணுக நீதிபதி ஆனந்த் வெங்கடேஷ் உத்தரவு பிறப்பித்துள்ளார். ஆருத்ரா கோல்டு நிறுவனம் முதலீடுகளுக்கு 20 முதல் 30 சதவீதம் வட்டி தருவதாகக்கூறி ஒரு லட்சத்திற்கும் மேலான முதலீட்டாளர்களிடம் ரூ.2438 கோடி மோசடி செய்ததாக குற்றசாட்டு எழுந்தது. இது தொடர்பாக 60,000க்கும் மேற்பட்ட புகார்கள் அளிக்கப்பட்ட நிலையில் 21பேர் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டது.

இந்த வழக்கில் நடிகர் ஆர்.கே.சுரேஷுக்கும் தொடர்பு இருப்பதாகக்கூறி அவர் மீதும் விசாரணை நடத்தப்பட்டது. ஆர்.கே.சுரேஷுக்கு விசாரணைக்காக ஆஜராக சம்மன் அனுப்பப்பட்ட நிலையில் அவர் வெளிநாடு சென்றிருப்பதால் தன்னால் ஆஜராக முடியாது என உயர்நீதிமன்றத்தை நாடி இருந்தார்.

இதற்கிடையே ஆர்.கே.சுரேஷுக்கும், ஆருத்ரா கோல்டு நிறுவனத்திற்கும்தொடர்பு இருப்பதாகக்கூறி அவரது வாங்கிக்கணக்கை காவல்துறையினர் முடக்கம் செய்தனர். இந்த நடவடிக்கையை எதிர்த்து ஆர்.கே.சுரேஷ் தரப்பில் உயர்நீதிமன்றத்தில் புதிய மனு தாக்கல் செய்யப்பட்டது.

வங்கிக்கணக்கு முடக்கப்பட்டிருப்பதால் தனக்கு மிகுந்த இழப்பு ஏற்பட்டுள்ளதாகவும் அன்றாட நடைமுறைகளை மேற்கொள்ள முடியவில்லை எனவும் அந்த மனுவில் தெரிவித்திருந்தார். வங்கிக்கணக்கு முடக்கம் தொடர்பான விவரங்கள் தமிழ்நாடு முதலீட்டாளர்கள் பாதுகாப்பு சட்ட வழக்குகளுக்கான நீதிமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுவிட்டதால் அந்த நீதிமன்றத்தை நடவேண்டும் என காவல்துறையினர் தெரிவிக்கின்றனர்.

இதனை பதிவு செய்துகொண்ட நீதிபதி, டி.என்.பி.ஐ.டீ. சிறப்பு நீதிமன்றத்தை நாடுமாறு ஆர்.கே.சுரேஷ் தரப்பிற்கு உத்தரவிட்டு வழக்கை முடித்துவைத்து நீதிபதி உத்தரவிட்டார்.

PUDUGAI VARALARU - National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.

வரலாறு விளையாட்டு

## ஆசிய விளையாட்டில்

# இந்தியாவுக்குதுப்பாக்கி சுடுதலில் மேலும் 2 தங்கம்




**பெய்ஜிங் : செப். 28,**

**ஆசிய விளையாட்டு போட்டியில் இந்திய துப்பாக்கிச் சுடுதலில் மேலும் 2 தங்கம் வென்று ஒட்டுமொத்த பதக்க எண்ணிக்கையை அதிகரித்துள்ளது.**

சீனாவின் ஹாங்சு நகரில் கடந்த சில நாட்களாக நடைபெற்று வரும் ஆசிய விளையாட்டு போட்டியில் இந்திய வீரர். வீராங்கனைகள் மிகவும் எதிர்பார்த்த போட்டிகளில் பதக்கங்களை கைவிடாமல் அறுவடை செய்து வருகின்றன. ஆடவர் 10 மீட்டர் ஏர் ரைபிள் குழு, மகளிர் கிரிக்கெட், குதிரையேற்றம் ஆகிய போட்டிகளில் இந்தியா தங்கத்தை கைப்பற்றி உள்ளது.

அந்த வரிசையில், நேற்று காலை நடைபெற்ற மகளிருக்கான 25 மீட்டர் பிஸ்டல் ரேபிட் குழு பிரிவு மற்றும் 50 மீட்டர் த்ரீ போஷிசனில் துப்பாக்கிச் சுடுதலிலும் தங்கம் வென்றுள்ளது. 50 மீட்டர் துப்பாக்கிச்சுடுதலில் 1,764 புள்ளிகள் பெற்று இந்திய அணி வெள்ளி பதக்கம் வென்றுள்ளது. 3 நிலை போட்டியில் சிஃப்ட் சாம்ரா (594), ஆஷி சௌக்சே(590), மனினி கௌசிக் (580) புள்ளிகள் பெற்றுள்ளனர்.

ஆசிய விளையாட்டு போட்டியில் 25 மீட்டர் பிஸ்டல் பிரிவில் இந்திய பெண்கள் அணி வீரர்கள் மனு பாக்கர், ஈஷா சிங், ரிதிம் சங்வான் ஆகியோர் 1,759 புள்ளிகளுடன் தங்கப் பதக்கம் வென்று அசத்தி உள்ளனர். 50 மீட்டர் பிஸ்டல் பிரிவில் இந்திய வீராங்கனை சம்ரா தங்கம் வென்றார். இந்தியாவின் சம்ரா சிப்ட் கவுர் தங்கம் வென்ற நிலையில் ஆஷி சவுக்சே வெண்கலப்பதக்கம் வென்றார். இதுவரையிலான ஆசிய விளையாட்டு போட்டிகளில் 5 தங்கம், 5 வெள்ளி உட்பட 19 பதக்கங்களுடன் பதக்க பட்டியலில் 6ம் இடத்தில் உள்ளது.

# ஆடவருக்கான பாய்மர படகுப்போட்டியில் வெண்கலப் பதக்கம் வென்றார் இந்திய வீரர் விஷ்ணு சரவணன்



**ஹாங்சோ : செப். 28,**

**ஆசிய விளையாட்டு போட்டியில் ஆடவருக்கான பாய்மர படகுப் போட்டியில் இந்திய வீரர் விஷ்ணு சரவணன் வெண்கலப் பதக்கம் வென்றார்.**

சீனாவின் ஹாங்சோ நகரில் கடந்த சில நாட்களாக நடைபெற்று வரும் ஆசிய விளையாட்டு போட்டியில், இந்திய வீரர், வீராங்கனைகள் மிகவும் எதிர்பார்த்த போட்டியில் பதக்கங்களை கைவிடாமல் அறுவடை செய்துவருகின்றனர். ஆடவர் 10 மீட்டர் ஏர் ரைபிள் குழு, மகளிர் கிரிக்கெட், குதிரை ஏற்றம் ஆகிய போட்டிகளில் இந்தியா தங்கத்தை கைப்பற்றியுள்ளது. இன்று காலை நடைபெற்ற மகளிருக்கான 25 மீட்டர் பிஸ்டல் ரேபிட் குழு பிரிவு மற்றும் 50 மீட்டர் ரைபிள் த்ரீ பொஷிசன் துப்பாக்கி சுடுதலிலும் இந்தியா தங்கம் வென்றுள்ளது.

இந்நிலையில், ஆசிய விளையாட்டு போட்டியில் ஆடவருக்கான பாய்மர படகுப்போட்டியில் இந்திய வீரர் விஷ்ணு சரவணன் வெண்கலப் பதக்கம் வென்றார். 34 புள்ளிகளைப் பெற்று தமிழ்நாட்டைச் சேர்ந்த விஷ்ணு சரவணன் வெண்கலப் பதக்கம் வென்றார். வெண்கலப் பதக்கம் வென்ற விஷ்ணு சரவணன் வேலூரில் மாவட்டத்தில் பிறந்தவர். ஆசிய விளையாட்டில் பாய்மர படகுப் போட்டியில் இந்தியாவிற்கு இதுவரை 3 பதக்கங்கள் கிடைத்துள்ளன.

# உலகக் கோப்பையுடன் தாயகம் திரும்புவோம் பாகிஸ்தான் கேப்டன் பாபர் அசாம் நம்பிக்கை



**லாகூர் : செப். 28,**

**உலகக் கோப்பையுடன் தாயகம் திரும்புவோம் பாகிஸ்தான் கேப்டன் பாபர் அசாம் நம்பிக்கை தெரிவித்து உள்ளார்.**

உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியில் பங்கேற்க இந்தியா புறப்படுவதற்கு முன்பாக பாகிஸ்தான் அணியின் கேப்டன் பாபர் அசாம் லாகூரில் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார்.

அப்போது அவர் கூறியதாவது: ஒரு அணியாக எங்களது மனவலிமை உயர்ந்த நிலையில் இருக்கிறது. நம்பிக்கையுடன் உள்ளோம். எங்களது சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்த முயற்சிப்போம். களத்தில் சாதிக்க எங்களுக்காக பிரார்த்திக்கும்படி ரசிகர்களை கேட்டுக் கொள்கிறேன்.

நாங்கள் இதற்கு முன்பு இந்தியாவில் விளையாடியதில்லை. அங்குள்ள சீதோஷ்ண நிலை, ஆடுகளத்தன்மை குறித்து ஆராய்ந்துள்ளோம். மற்ற ஆசிய நாடுகளில் உள்ளது போன்ற சூழல் தான் இந்தியாவில் இருப்பதாக அறிகிறோம். அதற்கு ஏற்ப தயாராவோம். உலகக் கோப்பை போட்டிக்கான பாகிஸ்தான் அணியை கேப்டனாக வழிநடத்த இருப்பது கவுரவமாகும். டாப்-4 இடத்திற்குள் வர வேண்டும் என்பது சிறிய இலக்குதான். சாம்பியனாக தாயகம் திரும்ப வேண்டும் என்பதே எங்களது விருப்பம். அதை நிறைவேற்றுவோம் என்று நம்புகிறேன்.

ஆமதாபாத்தில் இந்தியாவுக்கு எதிராக மிகப்பெரிய ரசிகர்கள் பட்டாளத்தின் முன் விளையாட இருப்பது பரவசமூட்டுகிறது. எனது திறமைக்கு ஏற்ப மிகச்சிறந்த பேட்டிங்கை வெளிப்படுத்த முயற்சிப்பேன். ஆசிய கோப்பை கிரிக்கெட்டில் தோல்வி அடைந்தாலும் அதில் செய்த தவறில் இருந்து பாடம் கற்றுள்ளோம் என்று பாபர் அசாம் கூறினார்.

# யுவராஜ் சிங்கின் அதிவேக அரைசத சாதனையை தகர்த்த நேபாளத்தின் தீபேந்திர சிங்



**ஹாங்சோ : செப். 28,**

**சர்வதேச டி20 கிரிக்கெட்டில் 300 ரன்களுக்கு மேல் குவித்த முதல் அணி என்ற சாதனையை படைத்துள்ளது நேபாளம். இந்தப் போட்டியில் அதிவேக அரைசதம் மற்றும் சதமும் பதிவு செய்யப்பட்டுள்ளது.**

19-வது ஆசிய விளையாட்டு போட்டி சீனாவின் ஹாங்சோவில் நடைபெற்று வருகிறது. இதில் ஆடவர் கிரிக்கெட்டில் நேபாளம் மற்றும் மங்கோலியா விளையாடின. முதலில் பேட் செய்த நேபாளம், 20 ஓவர்களில் 3 விக்கெட்கள் இழப்புக்கு 314 ரன்கள் எடுத்தது. மங்கோலியா 41 ரன்கள் எடுத்து தோல்வியை தழுவியது.

நேபாள அணி வீரர்கள் குஷல் மல்லா, 50 பந்துகளில் 137 ரன்கள் எடுத்தார். தீபேந்திர சிங், 10 பந்துகளில் 52 ரன்கள் எடுத்தார். அதன் மூலம் டி20 கிரிக்கெட்டில் அதிவேகமாக அரைசதம் பதிவு செய்தவர் என்ற சாதனையை அவர் படைத்துள்ளார். 8 சிக்ஸர்கள் அவரது இன்னிங்ஸில் அடங்கும். 9 பந்துகளில் அவர் அரைசதத்தை எட்டினார். இதன் மூலம் 2007-ல் இங்கிலாந்து அணிக்கு எதிராக 12 பந்துகளில் அரைசதம் பதிவு செய்த யுவராஜ் சிங்கின் சாதனையை அவர் தகர்த்துள்ளார்.

சர்வதேச டி20 கிரிக்கெட்டில் ஆப்கானிஸ்தான் அணி கடந்த 2019-ல் அயர்லாந்து அணிக்கு எதிராக குவித்த 278 ரன்கள் தான் ஒரு அணி ஒரே இன்னிங்ஸில் எடுத்த அதிகபட்ச ரன்களாக இருந்தது. அதையும் இந்தப் போட்டியில் நேபாளம் தகர்த்துள்ளது. 26 சிக்ஸர்களுடன் 314 ரன்களை நேபாளம் எடுத்துள்ளது.

குஷல் மல்லா, 34 பந்துகளில் சதம் பதிவு செய்தார். அதன் மூலம் சர்வதேச டி20 கிரிக்கெட்டில் குறைந்த பந்துகளில் சதம் பதிவு செய்த வீரராகி உள்ளார். 12 சிக்ஸர்கள் மற்றும் 8 பவுண்டரிகளை அவர் விளாசினார். இதற்கு முன்னர் ரோகித் சர்மா மற்றும் டேவிட் மில்லர் 35 பந்துகளில் சதம் பதிவு செய்திருந்தனர்.

# டி20 வரலாற்றில் புதிய சகாப்தம் ஒரே போட்டியில் 6 உலக சாதனைகள் படைத்த நேபாள அணி

**சீனா : செப். 28,**

**2023 ஆசிய விளையாட்டு போட்டிகள் தொடரில் டி20 கிரிக்கெட் போட்டியில் மங்கோலியாவைஎதிர்கொண்டு விளையாடிய நேபாள அணி, ஒரே போட்டியில் பல உலக சாதனைகளை படைத்து மிரட்டியுள்ளது.**

இந்த ஒரு போட்டியின் மூலம் உடைக்கவே முடியாது என நினைத்த பல கிரிக்கெட் ஜாம்பவான்களின் உலக சாதனைகளை உடைத்து, "என்ன பா நடக்குது இங்க" என்பது போல் அனைத்து கிரிக்கெட் ரசிகர்களையும் மிரட்சியில் ஆழ்த்தியுள்ளனர் நேபாள வீரர்கள்.

குஷல் மல்லா 50 பந்துகளில் 137 ரன்கள், ரோகித் பவ்டெல் 27 பந்துகளில் 61 ரன்கள், திபேந்திர சிங் 10 பந்துகளில் 52 ரன்கள் என வானவேடிக்கை காட்டிய மூவரும் நேபாள அணியை ஒரு அரிதான உலக சாதனைக்கு அழைத்து சென்றனர். இந்த போட்டியில் 314 ரன்களை குவித்த நேபாளம், டி20 கிரிக்கெட்டில் ஒரு இன்னிங்ஸில் 300 ரன்கள் குவித்த முதல் அணி என்ற உலக சாதனையை படைத்துள்ளது.

இதற்கு முன் 2019ஆம் ஆண்டு அயர்லாந்துக்கு எதிராக ஆப்கானிஸ்தான் அடித்த 278 ரன்களே ஒரு டி20 இன்னிங்ஸில் அடிக்கப்பட்ட அதிகபட்சரன்களாக இருந்தது.

இந்த போட்டியில் சிறப்பாக ஆடியகுஷல்மல்லா,34பந்துகளில் சதமடித்து மிரட்டி விட்டார். இதன் மூலம்சர்வதேசடி20கிரிக்கெட்டில் குறைந்த பந்துகளில் சதமடித்த வீரர் என்ற சாதனையை பதிவு செய்துள்ளார்.

12 சிக்ஸர்கள் மற்றும் 8 பவுண்டரிகளை விளாசி 34 பந்துகளில் சதமடித்த அவர், 35 பந்துகளில் சதமடித்து சாதனை செய்திருந்தரோகித்சர்மாமற்றும் டேவிட் மில்லர் ஆகியோரின் சாதனையை முறியடித்துள்ளார்.

போட்டியின் 19வது ஓவரின் 2வது பந்தில் களத்திற்கு வந்த திபேந்திர சிங், அந்த ஓவரில் எதிர்கொண்ட 5 பந்துகளையும் சிக்சர்களாக பறக்கவிட்டு வானவேடிக்கை காட்டினார். பின்னர் கடைசி மற்றும் 20வது ஓவரின் 2வது பந்திற்கு ஸ்டிரைக் வந்த திபேந்திரா அடுத்த 4 பந்துகளில் 3 சிக்சர்களை பறக்கவிட்டு,9பந்தில்50ரன்களை எட்டி யாருமே படைக்காத இமாலய சாதனையை படைத்து ஆச்சரியத்தை ஏற்படுத்தினார்.

9 பந்துகளில் 8 சிக்சர்களை கிரவுண்டிற்குவெளியேஅனுப்பிய திபேந்திர, டி20 கிரிக்கெட்டில் 16 வருடங்களாக உடைக்கவே முடியாதரெக்கார்டைவைத்திருந்த யுவராஜ் சிங்கின் 12 பந்துகளில் அரைசதம் என்ற சாதனையை முறியடித்துள்ளார்.

10பந்துகளில்8சிக்சர்களுடன் 52 ரன்களை குவித்த திபேந்திர சிங், 520 ஸ்டிரைக்ரேட்டுடன் இதை செய்து அசத்தியுள்ளார். இதன்மூலம் ஒரு டி20 இன்னிங்ஸில்10பந்துகள்அல்லது அதற்கு மேற்பட்ட பந்துகளை எதிர்கொண்டுஅதிகபட்சஸ்ட்ரைக் ரேட் வைத்திருக்கும் ஒரே வீரர் என்ற இமாலய சாதனையை படைத்து அசத்தியுள்ளார்.

இந்த பட்டியலில் 10 பந்துகள் அல்லது அதற்கு மேற்பட்ட பந்துகளை எதிர்கொண்டு எந்த ஒரு வீரரும் 400க்கு மேற்பட்ட ஸ்டிரைக்ரேட் கூட வைத்திருக்கவில்லை. யாரும் நெருங்கவே முடியாத இந்த சாதனையை படைத்திருக்கும் திபேந்திராவுக்குஅடுத்தஇடத்தில் வெஸ்ட் இண்டீஸின் ட்வெய்ன் ஸ்மித் 7 பந்துகளில் 29 ரன்கள் அடித்து 414 ஸ்டிரைரேட்டுடன் இருக்கிறார். இதை 2007ல் வங்கதேசத்துக்கு எதிராக அவர் அடித்திருந்தார்.

இந்த பட்டியலில் 2019-ம் ஆண்டுசெக்குடியரசுதுருக்கியை 257 ரன்கள் வித்தியாசத்தில் வீழ்த்தியதே அதிகபட்ச ரன்கள் வித்தியாசத்தில் பெற்ற வெற்றியாக இருந்தது. தற்போது அந்த ரெக்கார்டை நேபாளம் உடைத்துள்ளது.

மங்கோலியாவுக்குஎதிராக314 ரன்களை குவித்த நேபாள அணி, இந்த ஒரு இன்னிங்ஸில் மட்டும் 26 சிக்சர்களை குவித்துள்ளது. இதன் மூலம் டி20 கிரிக்கெட் வரலாற்றில் ஒரு இன்னிங்ஸில் அதிக சிக்சர்களை பதிவு செய்த அணியாகநேபாளம்மாறியுள்ளது.

இதற்கு முன் 2019ஆம் ஆண்டு அயர்லாந்துக்கு எதிராக ஆப்கானிஸ்தான் அடித்த 22 சிச்கர்களேஒருடி20இன்னிங்ஸில் அடிக்கப்பட்ட அதிக சிக்சர்களாக இருந்தது. தற்போது அந்த சாதனையையும் நேபாளம் முறியடித்துள்ளது.

வரலாறு சினிமா

# ஏ.ஆர்.ரகுமான் மீது ஆணையரகத்தில் புகார்



**சென்னை : செப். 28,**

**ஏ.ஆர்.ரகுமான் மீது சென்னை காவல் ஆணையரிடம் அறுவை சிகிச்சை நிபுணர்கள் சங்கம் சார்பில் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

கடந்த 2018 ஆம் ஆண்டு அறுவை சிகிச்சை நிபுணர்களுக்கான மாநாட்டில் ஏ.ஆர். ரகுமான் இசை நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டது. அப்போது மாநாடு நடத்த சரியான இடம் மற்றும் அனுமதி கிடைக்காததால் ஏ.ஆர்.ரகுமான் நிகழ்ச்சி நடைபெறாமல் போனது. நிகழ்ச்சிக்காக ஏ.ஆர். ரகுமானுக்கு வழங்கப்பட்ட ரூ.29.50 லட்சத்தை திரும்பப் கேட்டு கடிதம் அனுப்பப்பட்டது. ஆனால் முன்பணத்தை பெற்றுக்கொண்ட ஏ.ஆர். ரகுமான் திருப்பி தரவில்லை என குற்றம் சாட்டப்படுகிறது.

ஏ.ஆர்.ரகுமான் மீது சென்னை காவல் ஆணையரிடம் அறுவை சிகிச்சை நிபுணர்கள் சங்கம் சார்பில் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏ.ஆர்.ரகுமான் தரப்பில் தரப்பட்ட காசோலை, வங்கிக் கணக்கில் பணம் இல்லாமல் திரும்பி வந்ததாகவும் புகார் அளிக்கப்பட்டுள்ளது. கடந்த 2018ல் இசை நிகழ்ச்சி நடத்துவதாக ரூ.29.50 லட்சம் முன்பணம் பெற்று, திருப்பி தரவில்லை என குற்றம் சாட்டியுள்ளனர். மாநாடு நடத்த அனுமதி கிடைக்காததால் நிகழ்ச்சிக்கான முன் தொகையை திருப்பி கேட்டதாகவும், அதனை தரவில்லை எனவும் புகாரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# வாலி பட வழக்கு எஸ்.ஜே. சூர்யா ஆஜராகி சாட்சியம்



**சென்னை : செப். 28,**

**இயக்குனரும், நடிகருமான எஸ்.ஜே. சூர்யா இயக்கத்தில் கடந்த 1999-ஆம் ஆண்டு 'வாலி' திரைப்படம் வெளியானது.**

இந்த படத்தின் இந்தி உரிமை போனி கபூருக்கு வழங்கப்பட்டிருந்தது. இதை எதிர்த்து எஸ்.ஜே.சூர்யா உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருந்தார். இந்த வழக்கை விசாரித்த உயர் நீதிமன்றம் கதை எழுதியவற்கே சொந்தம் என்பதற்கான எந்த ஆவணத்தையும் எஸ். ஜே.சூர்யா தாக்கல் செய்யாததால் படத்தின் காப்புரிமை தயாரிப்பாளருக்கு தான் சொந்தமானது அதனால் இப்படத்தின் இறுதி ரீமேக் வேலையை துவங்குவதற்கு இடைக்கால அனுமதியை வழங்கி உயர்நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. இந்த வழக்கு உயர் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. இந்நிலையில், இந்த வழக்கு தொடர்பாக சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தில் உள்ள வாக்குமூலங்களை பதிவு செய்யும் நீதிமன்றத்தில் நீதிபதி கிங்ஸ்லி கிரிஸ்டோபர் முன்பு இயக்குனர் எஸ்.ஜே. சூர்யா நேரில் ஆஜராகி சாட்சியம் அளித்தார். இந்த விசாரணை திங்கள் கிழமைக்கு தள்ளி வைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# 4 தமிழ் திரைப்படங்கள் ஆஸ்கர் விருதுக்கு பரிந்துரை




**சென்னை : செப். 28,**

**இந்திய திரைப்பட கூட்டமைப்பு சார்பில் 96-வது ஆஸ்கர் விருதுக்கு பரிந்துரை செய்யப்படும் திரைப்படங்கள் குறித்த அறிவிப்பை பரிந்துரை குழுவினர் வெளியிடும் நிகழ்ச்சி சென்னை, அண்ணாசாலையில் உள்ள தென்னிந்திய வர்த்தக சபையில் நடைபெற்றது.**

இதில், தமிழ், தெலுங்கு, இந்தி, மலையாளம், மராத்தி உள்ளிட்ட மொழிகளில் இருந்து 22 திரைப்படங்கள் ஆஸ்கர் விருது பரிந்துரைக்கு அனுப்படுகிறது.

தமிழில் இயக்குனர் வெற்றிமாறன் இயக்கத்தில் வெளியான 'விடுதலை -1', மாரிசெல்வராஜ் இயக்கத்தில் வெளியான 'மாமன்னன்', வெங்கி அட்லூரி இயக்கத்தில் 'வாத்தி', இயக்குனர் பொன்குமார் இயக்கத்தில் வெளியான '1947 ஆகஸ்ட் 16' திரைப்படமும் முன் மொழியவுள்ள பட்டியலில் உள்ளது. தமிழில் 4 திரைப்படங்களும், தெலுங்கில் 4 திரைப்படங்களும், இந்தியில் 11 திரைப்படங்களும், மலையாளத்தில் ஒரு திரைப்படமும், மராத்தியில் 2 திரைப்படமும் இந்த பரிந்துரை பட்டயலில் இடம்பெற்றுள்ளன. மலையாளத்தில் '2018' திரைப்படம் பரிந்துரைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

'பாகுபலி' படத்தில் நடித்த நடிகர் பிரபாஸின் மெழுகு சிலை நிறுவப்பட்டுள்ளது. அந்த மெழுகு சிலையின் புகைப்படம் ஒன்று சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது. பாகுபலி படத்தில் வந்த பிரபாஸின் கம்பீர உருவ தோற்றமும், மெழுகு சிலையின் உருவ தோற்றமும் முற்றிலும் மாறுபட்டதாக இருந்தது. இந்த சிலையை அருங்காட்சியகத்தில் நிறுவுவதற்கு முன், சம்பந்தப்பட்ட பாகுபலி திரைப்பட தயாரிப்பாளர்களிடம், அருங்காட்சியக நிர்வாகம் அனுமதி பெறவில்லை என்று கூறப்படுகிறது. அனுமதியின்றி அருங்காட்சியகத்தில் சிலையை நிறுவியதால் கடும் கோபம் கொண்டுள்ள பாகுபலி தயாரிப்பாளர்கள், தற்போது அருங்காட்சியக நிர்வாகத்திற்கு எதிராக நடவடிக்கை எடுக்க தயாராகி வருகின்றனர். மேலும், அந்த சிலையை அருங்காட்சியகத்தில் இருந்து அகற்றுவதற்கான நடவடிக்கையும் எடுத்து வருகின்றனர். இதுகுறித்து பாகுபலி படத்தின் தயாரிபாளர் ஷோபு யர்லகட்டா வெளியிட்ட பதிவில், 'அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ள மெழுகு சிலையானது, எங்களது அனுமதியின்றி வைக்கப்பட்டுள்ளது. இந்த சிலையை அங்கிருந்து அகற்றுவதற்கான நடவடிக்கையை மேற்கொண்டுள்ளோம்' என்று கூறியுள்ளார்.

# கவுதமியிடம் ரூ.7 கோடிக்கு மேல் ஏமாற்றிய தொழில் அதிபர்கள் கமிஷனர் அலுவலகத்தில் புகார்



**சென்னை : செப். 28,**

**தமிழ் திரையுலகில் முன்னணி நடிகையாக திகழ்ந்தவர் கவுதமி.**

இவர் சென்னை போலீஸ் கமிஷனர் அலுவலகத்தில் அளித்துள்ள மனுவில் கூறியிருப்பதாவது : திருவள்ளூர் மாவட்டம் கோட்டையூர் கிராமத்தில் நானும் எனது தாய் வசுந்தராதேவியும் கடந்த 1990-ம் ஆண்டு 10 ஏக்கர் நிலத்தை வாங்கினோம். எனது தாய் 2000-ம் ஆண்டில் இறந்துவிட்டார். இந்த நிலத்தில் 8.16 ஏக்கர் நிலம் எனது பெயரில் இருந்தது. இந்நிலையில், வேளச்சேரியை சேர்ந்த அழகப்பன் மூலம் அண்ணாநகர் 6-வது அவென்யூவை சேர்ந்த தொழில் அதிபர் பலராமன் மற்றும் செங்கல்பட்டு மகேந்திரா சிட்டி பகுதியை சேர்ந்த ரகுநாதன் ஆகியோர் அறிமுகமாகினர். இருவரும் நம்பிக்கையான நபர்கள் என்பதால் எனது பெயரில் உள்ள 8.16 ஏக்கர் நிலத்தை நல்ல விலைக்கு விற்பனை செய்து தருவதாக உறுதி அளித்தனர். அதனால் அந்த நிலத்தை கடந்த 2015-ம் ஆண்டு பலராமன், ரகுநாதன் ஆகியோருக்கு தனி பொது அதிகார ஆவணம் எழுதி கொடுத்தேன். பிறகு இந்த இடத்தை தனியார் நிறுவனம் வாங்க விரும்புவதாக கூறினர்.

மேலும், நிலத்தில் பிரச்சினை இருப்பதாக கூறி ரூ.4.10 கோடிக்கு விற்பனை செய்ததாக 2 தவணையில் பணத்தை கொடுத்துவிட்டு கையெழுத்து பெற்றனர். கடந்த 2021-ம் ஆண்டு செப்டம்பர் 24-ந்தேதி வருமான வரித்துறை அலுவலகத்தில் இருந்து கடிதம் ஒன்று வந்தது. அதில் கோட்டையூரில் உள்ள சொத்துகள் ரூ.11,17,38,907-க்கு விற்பனை செய்ததில் கேப்பிட்டல் கெய்ன்ஸ் டெக்ஸ் ரூ.2,61,25,637 வருமான வரி கட்டவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. அதன்பிறகுஎனதுஅனைத்து வங்கி கணக்குகளும் முடக்கப்பட்டதை கண்டு நான் மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளானேன். இதுகுறித்து நான் உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்த போது, நிலம் விற்பனை தொகையில் 25 விழுக்காடு ரூ.2,61,25,637 கட்டவேண்டும் என்று நீதிமன்றம் உத்தரவிட்டது. அதன்படி நான் ரூ.65,31,500 கட்டியுள்ளேன். இந்த வழக்கு தற்போது நிலுவையில் உள்ளது.

பின்னர் எனது சொத்தை விற்பனை செய்தது தொடர்பான ஆவணங்களை சுங்கு வார்சத்திரம் சார்பதிவாளர் அலுவலகத்தில் நகல் எடுத்து பார்த்த போது தான், நிலத்தை விற்பனை செய்யபவர் ஏஜென்டாக இருந்த பலராமன், ரகுநாதன் ஆகியோர் கடந்த 6.1.2016-ம் ஆண்டு 8.16 ஏக்கர் நிலம் விற்பனை செய்ததன் மூலம் ரூ.11,17,38,907 பணம் பெற்றுள்ளனர். அதில் ரூ.4.10 கோடி மட்டும் பணத்தை கொடுத்துவிட்டு மீதமுள்ள ரூ.7,07,38,908 பணம் கொடுக்காமல் இருவரும் பரித்து கொண்டு ஏமாற்றி விட்டனர். எனவே இருவர் மீதும் தகுந்த நடவடிக்கை எடுத்து எனது பணத்தை மீட்டு தர வேண்டும்.

இவ்வாறு நடிகை கவுதமி புகார் அளித்துள்ளார். புகாரின் மீது நடவடிக்கை எடுக்க மத்திய குற்றப்பிரிவு கூடுதல் கமிஷனர் மகேஸ்வரிக்கு போலீஸ் கமிஷனர் சந்தீப் ராய் ரத்தோர் உத்தரவிட்டுள்ளார். அதன்படி மத்திய குற்றப்பிரிவு-2 துணை கமிஷனர் இந்த மோசடி தொடர்பாக விசாரணை நடத்தி வருகிறார். நடிகை கவுதமி, ஸ்ரீபெரும்புதூரில் உள்ள ரூ.2.5 கோடி மதிப்பிலான சொத்துக்களை ஏமாற்றிவிட்டதாக ஏற்கனவே தொழில் அதிபர் அழகப்பன் மீது புகார் அளித்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.

வரலாறு உலகம்

## ஆன்லைன் வர்த்தக நடைமுறைக்கான சட்ட விதிகளை மீறியதாக

# அமேசான் நிறுவனம் மீது அமெரிக்க அரசு வழக்கு




**வாஷிங்டன் : செப். 28,**

**ஆன்லைன் வர்த்தக நடைமுறைக்கான சட்ட விதிகளை மீறியதாக அமேசான் நிறுவனம் மீது அமெரிக்க அரசு வழக்கு தொடர்ந்துள்ளது.**

ஆன்லைன் விற்பனை சந்தையில் கொடிகட்டி பறக்கும் அமேசான் நிறுவனம் மீது அமெரிக்காவின் கூட்டாட்சி வர்த்தக ஆணையம் இந்த வழக்கை தொடுத்துள்ளது. அமேசான் தங்களது விற்பனை தளத்திலும் சமூக வலைத்தளங்களிலும் ஆதிக்கம் செலுத்தி லாபம் அடைந்ததாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. அமேசான் தளத்தில் பல விற்பனையாளர்களின் பொருட்கள் குறைந்த விலைக்குகிடைக்கும்போது, தங்களின் சொந்த தயாரிப்பு நிறுவனங்களை அமேசான் முன்னிலைப்படுத்தியதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.


இதன் மூலம் மற்ற விற்பனையாளர்களிடம் குறைந்த விலைக்கு கிடைக்கும் ஒரு பொருளை அமேசான் தமது சொந்த தயாரிப்பு நிறுவனங்களின் மூலம் அதிக விலைக்கு விற்றதாகவும் அமெரிக்காவின் கூட்டாட்சி வர்த்தக ஆணையம் குற்றம் சாட்டியுள்ளது.

அமெரிக்காவின் 17 மாநில அட்டர்னி ஜெனரல்கள் இணைந்து 4 ஆண்டுகள் விசாரணைக்கு பின்னர் இந்த வழக்கு தொடுக்கப்பட்டது. அமேசானின் வர்த்தக விதிமீறல்களுக்கு நீதிமன்றம் நிரந்தர தடை விதிக்க வேண்டும் என்றும் அமெரிக்காவின் கூட்டாட்சி வர்த்தக ஆணையம் கேட்டுக் கொண்டுள்ளது. இதே போல இணைய தேடுபொறி சந்தையில் போட்டியாளர்களை பின்னுக்கு தள்ள சட்ட விதிகளைமீறியதாககூகுள் மீதும் அமெரிக்க அரசு வழக்கு தொடர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## ஜி20ல் ஆப்பிரிக்காவை இணைத்தது போல்

# ஐநா பாதுகாப்பு கவுன்சிலிலும் உரிய மாற்றம் தேவை

## ஒன்றிய அமைச்சர் ஜெய்சங்கர் பேச்சு



**ஐநா : செப். 28,**

**ஜி 20 அமைப்பில் ஆப்பிரிக்காவை இணைத்தது போல ஐநா பாதுகாப்பு கவுன்சிலிலும் உரிய மாற்றம் தேவை என்று ஒன்றிய அமைச்சர் ஜெய்சங்கர் பேசினார்.**

78வது ஐநா பொதுச்சபை அமர்வில் இந்தியாவின் சார்பில் ஒன்றிய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் கலந்து கொண்டு பேசியதாவது: இந்தியாவில் சமீபத்தில் முடிவடைந்த ஜி20 உச்சிமாநாட்டில் ஆப்பிரிக்க யூனியனை நிரந்தர உறுப்பினராக இணைப்பதற்கான இந்தியாவின்முன்முயற்சியின் உதாரணமாக கொண்டு ஐநா பாதுகாப்பு கவுன்சிலை சமகாலத்திற்கு மாற்றுவதற்கு நடவடிக்கைஎடுக்கவேண்டும். ஏனெனில் இந்தியாவின் முன்முயற்சியால், ஆப்பிரிக்க யூனியன் ஜி 20ல் நிரந்தர உறுப்பினராக அனுமதிக்கப்பட்டது.

இதன் மூலம், நீண்டகாலமாக மறுக்கப்பட்ட ஒரு முழு கண்டத்திற்காகவும் நாங்கள் குரல் கொடுத்தோம். இந்த சீர்திருத்தத்தின் அடிப்படையில் ஐநா பாதுகாப்பு கவுன்சிலை சமகாலமாக மாற்றுவதற்கு ஊக்கமளிக்க வேண்டும்.' என்றார்.

ஐ.நா பொதுச் சபையின் பொது விவாதத்தில் அமைச்சர் ஜெய்சங்கர் தனது உரையைத் தொடங்கும் போது, "பாரதத்திலிருந்து நமஸ்தே" என்று தெரிவித்தார். 17 நிமிடங்களுக்கு மேல் கூப்பிய கைகளுடனும் அவர் உரையாற்றினார். 'நமஸ்தே ப்ரம் பாரத்' என்று அவர் தனது உரையைத் தொடங்கினார்.

# அசர்பைஜானில் கியாஸ் நிலையம் தீப்பிடித்து 20 பேர் உடல் கருகி பலி



**பாகு : செப். 28,**

**அசர்பைஜானில் கியாஸ் நிலையம் தீப்பிடித்து 20 பேர் உடல் கருகி பலியாகினர். 300-க்கும் மேற்பட்டோருக்கு படுகாயம் ஏற்பட்டது.**

தென்மேற்கு ஆசிய நாடான அசர்பைஜானுக்கு சொந்தமான பகுதி நாகோர்னோ-கராபாக். இது 1994-ம் ஆண்டு முதல் அண்டை நாடான அர்மீனியர்களின் கட்டுப்பாட்டில் உள்ளது. இந்த பகுதிகளை அங்குள்ள பிரிவினைவாதிகள் கடந்த 30 ஆண்டுகளாக ஆட்சி செய்து வருகின்றனர்.

தனதுநாட்டின்பகுதிகளை மீண்டும் இணைக்கும் வகையில் அசர்பைஜான் ராணுவம் அங்கு அதிரடியாக களமிறங்கியது. அப்போது ராணுவம் நடத்திய துப்பாக்கி சூட்டில் பிரிவினைவாதிகள் சரண் அடைந்தனர்.

இந்த பதற்றமான சூழ்நிலை காரணமாக அங்கிருந்தவர்கள் அர்மீனியாவுக்கு தப்பி செல்ல முயன்றனர். இதனால் அசர்பைஜானின் ஸ்டெபனகெர்ட்டில் உள்ள கியாஸ் நிலையத்தில் எரிபொருள் நிரப்புவதற்காக ஏராளமான கார்கள் அணிவகுத்து நின்றன. அப்போது அந்த கியாஸ் நிலையத்தில் திடீரென தீப்பிடித்து பயங்கர சத்தத்துடன் வெடித்தது. இதில் பல கார்கள் தூக்கி வீசப்பட்டன. மேலும் இந்த தீ மளமளவென அருகில் உள்ள மற்ற பகுதிகளுக்கும் வேகமாக பரவியது.

இதனையடுத்து தீயணைப்பு வீரர்கள் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று தண்ணீரை பீய்ச்சியடித்தனர். இதனால் பல மணி நேர போராட்டத்துக்கு பின்னர் தீ கட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. எனினும் இந்த தீ விபத்தில் 20 பேர் உடல்கருகிபலியாகினர். 300-க்கும் மேற்பட்டோருக்கு படுகாயம் ஏற்பட்டது. மீட்பு படையினர் அவர்களை மீட்டு சிகிச்சைக்காக ஆஸ்பத்திரியில் அனுமதித்தனர். அதில்பலரது நிலைமை கவலைக்கிடமாக இருப்பதால்பலிஎண்ணிக்கை மேலும் உயரும் என அஞ்சப்படுகிறது.

# இலங்கைக்கு வரும் சீன உளவு கப்பல் அமெரிக்கா கவலை



**கொழும்பு : செப். 28,**

**சீனஉளவுகப்பல்வருவது குறித்து இலங்கையிடம் அமெரிக்கா கவலை தெரிவித்ததாக தகவல் வெளியாகி உள்ளது.**

சீனாவின், 'ஷி யான் 6' என்ற ஆய்வு கப்பல் அடுத்த மாதம் (அக்டோபர்) இலங்கையில் உள்ள கொழும்பு துறைமுகத்துக்கு வரவுள்ளதாகவும், அங்கு சில நாட்கள் ஆய்வு நடத்த உள்ளதாகவும் தகவல்கள் வெளியாகி உள்ளன. சீனா இத்தகைய ஆய்வு கப்பல்களை ஆராய்ச்சிகாக அனுப்புவதாக கூறினாலும் உண்மையில்அந்தகப்பல்கள் பிறநாடுகளை உளவு பார்க்க பயன்படுத்தப்படுவதாக பரவலாக குற்றம் சாட்டப்படுகிறது. அந்த வகையில் இலங்கைக்கு அனுப்பப்படும் உளவு கப்பல்கள் குறித்து இந்தியா தொடர்ந்துகவலைதெரிவித்து வருகிறது.

இந்த நிலையில் இலங்கைக்கு சீன உளவு கப்பல் வருவது குறித்து இலங்கையிடம் அமெரிக்கா கவலை தெரிவித்ததாக தகவல் வெளியாகி உள்ளது. இதுகுறித்து இலங்கை அரசு வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில், "ஐ.நா. பொதுசபையின் கூட்டத்தொடரில் பங்கேற்பதற்காக அமெரிக்கா சென்றுள்ள இலங்கை வெளியுறவு மந்திரி அலி சப்ரியை சந்தித்த அமெரிக்க வெளியுறவு துணை மந்திரி விக்டோரியா நுலாண்ட் சீன உளவு கப்பல் விவகாரம் குறித்துகவலைதெரிவித்தார். அப்போது இலங்கை ஒரு நடுநிலையான நாடு என்ற வகையில், வெளிநாட்டு கப்பல்கள்மற்றும்விமானங்கள் இலங்கையில் எந்தவொரு நடவடிக்கையையும் மேற்கொள்வதில் பின்பற்ற வேண்டிய நிலையான செயற்பாட்டு நடைமுறையை வகுத்துள்ளதாக விக்டோரியாவிடம் அலி சப்ரி விளக்கமளித்தார்" என்று இலங்கை அரசு செய்தி குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

# ஈராக்கில் திருமண நிகழ்ச்சியில் ஏற்பட்ட தீ விபத்தில் 113 பேர் உயிரிழப்பு, 150 பேர் படுகாயம்

## மணமக்களும் பலியான பரிதாபம்



**பாக்தாத் : செப். 28,**


**ஈராக்கில் திருமண விழாவில் நேரிட்ட தீ விபத்தில் சிக்கி 113 பேர் பலியான சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.**

ஈராக்கின் வடக்கு பகுதியில் உள்ள அல்-ஹம்தநியா நகரத்தில் உள்ள ஒரு மண்டபத்தில் திருமண நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டு இருந்தது. விழா மண்டபத்தில் பட்டாசுகள் வெடிக்கப்பட்ட போது, ஏற்பட்ட தீப்பொறி, இருப்பு வைக்கப்பட்டு இருந்த பட்டாசுகள் மீது விழுந்தது. இதையடுத்து பட்டாசுகள் பயங்கரமாக வெடித்து சிதறின. பலூன்களை நிரப்ப வைக்கப்பட்டு இருந்த சிலிண்டர்கள் வெடிகுண்டுகள் போல வெடித்து சிதறியது. இதனால் திருமண மண்டபத்தின் பெரும் பகுதி சேதம் அடைந்தது.

இந்த கோர விபத்தில் மணமக்கள், பெண்கள், குழந்தைகள் உள்ளிட்ட 113 பேர் உயிரிழந்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. படுகாயங்களுடன் மீட்கப்பட்ட 150 பேருக்கு பல்வேறு மருத்துவமனைகளில் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. அதில் பலரது உடல்நிலைகவலைக்கிடமாக இருப்பதால் உயிரிழப்புகள் அதிகரிக்கும் என அஞ்சப்படுகிறது. எளிதில் தீப்பற்றக்கூடிய அலங்காரப் பொருட்களை கொண்டு விழா மண்டபம் முழுவதும் அலங்கரிக்கப்பட்டு இருந்ததே விபத்திற்கு காரணமாக கூறப்படுகிறது.

## சீனாவில் மீண்டும் கொரோனா போன்ற கொடிய தொற்று பரவும் அபாயம்

# நிபுணர்கள் எச்சரிக்கை



**பீஜிங் : செப். 28,**

**கடந்த 4 ஆண்டுகளுக்கு முன்பு சீனாவில் உருவான கொரோனா என்ற கொடூர நோய் இந்தியா உள்ளிட்ட உலக நாடுகள் முழுவதும் பரவி லட்சக்கணக்கான மக்கள் உயிரை பறித்தது.**

தொடர்ந்து அந்த கொரோனா அரக்கன் உருமாறி பொதுமக்களை பாடாய் படுத்தியது. இந்த தொற்றில் இருந்து உலக நாடுகள் கொஞ்சம், கொஞ்சமாக மீண்டுதற்போது தான் சகஜ நிலைக்கு திரும்பி உள்ளது. இருந்த போதிலும் கொரோனா முழுமையாக நம்மை விட்டு அகலவில்லை என்று நிபுணர்கள் தெரிவித்து உள்ளனர்.

இந்த சூழ்நிலையில் சீனாவை அச்சுறுத்தும் வகையில் கொரோனா போன்ற கொடூர தொற்று நோய் மீண்டும் பரவ வாய்ப்பு இருப்பதாக அந்நாட்டின் தொற்று நோய் நிபுணர் ஹி சென்க்ஸ் தெரிவித்துள்ளார். வவ்வால்கள் மூலம் இந்த பெருந்தொற்று வேகமாக பரவும் என அவர் எச்சரித்து உள்ளார். இது தொடர்பாக அவர் தலைமையிலான தொற்று நோய் நிபுணர்கள் நடத்திய ஆய்வில் இது தெரியவந்துள்ளது. இந்த ஆய்வில் 40 வகையான கொரோனா வைரஸ் மறு உருவாக்கம் பெற்று இருப்பதாகவும், இதில் பாதிக்கு மேல் மிகவும் ஆபத்தானது எனவும் கண்டறிப்பட்டு உள்ளது.

இந்த தொற்றில் 3 வகை மீண்டும் ஆபத்தை விளைவிக்கக்கூடியது என்றும் கொரோனா போன்ற தொற்று பரவும் வாய்ப்புகள் அதிகம் என்றும்நிபுணர்கள்தெரிவித்து உள்ளனர். ஆனால் சில தொற்று நோய் நிபுணர்கள் இதை மறுத்து உள்ளனர். 3 ஆண்டுகளுக்கு பிறகு மறுபடியும் வைரஸ் பரவும் என்பதை ஏற்க முடியாது. பொதுமக்களின் பாதுகாப்பு உணர்வேஎதிர்காலத்தில் இது போன்ற வைரஸ் பரவலை தடுத்து விடும் என்றும் அவர்கள் கருத்து தெரிவித்து உள்ளனர்.

## ஹாப்பி பர்த்டே கூகுள்

# சிறப்பு டூடுலை வெளியிட்டு, சில்வர் ஜூப்லி கொண்டாட்டம் பயனர்களுக்கு நன்றி தெரிவித்த நிறுவனம்




**கலிபோர்னியா : செப். 28,**

**உலகின் முன்னணி தேடுபொறி நிறுவனமான கூகுள் நேற்று தனது 25-வது பிறந்தநாளை கொண்டாடியது.**

கூகுள் பகவான் என கடவுள் போல நம்பும் அளவுக்கு நமக்கு நம்பிக்கை அளிக்கிறது. நாம் தினசரி பயன்படுத்தும் இணையதளத்தில் இன்றியமையாதது கூகுள். எந்த சந்தேகம் தோன்றினாலும் எதை பற்றி தெரிந்துகொள்ள விரும்பினாலும்அதற்குமுதல் நுழைவாயிலாக இருப்பது இந்த மேம்படுத்தப்பட்ட தேடுபொறியே. அவ்வாறாக இருக்கும் கூகுள் நேற்று தனது 25-வது பிறந்தநாளை கொண்டாடியது.

செர்கே ப்ரின், லாரி பேஜ் இருவரால் 1998-ம் ஆண்டு இதே நாளில் உலகிற்கு அறிமுகப்படுத்தப்பட்ட கூகுள் இன்று இணையதள பயன்பாட்டில் தவிர்க்க முடியாத ஒன்றாக மாறியுள்ளது. உலகம் முழுவதும் 430 கோடிக்கு அதிகமான பயனாளிகளை வைத்திருக்கும் கூகுள் ஒவ்வொரு நாளும் தன்னை மேம்படுத்தி கொண்டே இருக்கிறது. உலகம் முழுவதும் வரைபடம் மூலம் வழி சொல்வதில் இருந்து பலரின் வாழ்க்கைக்கு வழிகாட்டவும் உதவும் கூகுளுக்கு பிறந்தநாள் வாழ்த்து சொல்லி பெருமை கொள்ளவோம்.

கூகுள் 1998-ம் ஆண்டிலிருந்து நிறைய மாறிவிட்டது என்பதை வலியுறுத்திஇன்றையடூடுலில் காணப்பட்ட அதன் லோகோ உட்பட மாற்றியுள்ளது. ஆனால், அதன் நோக்கம் அப்படியே உள்ளது என்று கூறுகிறது. உலகின் தகவல்களை ஒழுங்கமைத்து அதை உலகளாவிய அணுகக்கூடியதாகவும் பயனுள்ளதாகவும் மாற்றுகிறது. கடந்த 25 ஆண்டுகளாக பயணித்ததற்காக பயனர்களுக்கு நன்றி தெரிவித்து, எதிர்காலம் நம்மை எங்கு அழைத்துச் செல்கிறது என்பதைப் பார்க்க நாங்கள் ஆவலுடன் காத்திருக்கிறோம் என்று கூகுள் தெரிவித்துள்ளது.

## அமெரிக்க வரலாற்றில் முதல்முறை தொழிலாளர்கள் போராட்டத்தில் கலந்துகொண்ட

# அதிபர் ஜோ பைடன்



**வாஷிங்டன் : செப். 28,**

**அமெரிக்காவின் மிச்சிகன் மாகாணத்தில் நடைபெற்று வரும் ஆட்டோமொபைல் தொழிலாளர்கள் போராட்டத்தில் அதிபர் ஜோ பைடன் கலந்து கொண்டு அவர்களுக்கு ஆதரவு தெரிவித்தார்.**

மிச்சிகன் மாகாணத்தில் நடைபெற்ற ஆட்டோமொபைல் தொழிலாளர்கள் போராட்டத்தில் அமெரிக்க அதிபர் கலந்து கொண்டார். அதிபர் தேர்தலுக்கான பரபரப்பு அதிகரித்துள்ள நேரத்தில் ஜோ பைடனின் இந்த செயல் முக்கியத்துவம் வாய்ந்ததாக பார்க்கப்படுகிறது. மேலும் அமெரிக்க வரலாற்றிலேயே தொழிலாளர்களின் போராட்டத்தில் கலந்து கொண்ட முதல் அதிபர் என்ற பெருமையையும் ஜோ பைடன் தட்டிச் சென்றுள்ளார்.

ஆட்டோமொபைல் தொழிலாளர் கூட்டமைப்பு சின்னம் பொறிக்கப்பட்ட தொப்பியை அணிந்தபடி போராட்டத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்கிழமை கலந்து கொண்ட பைடன், தொழிலாளர்களுக்கு தன்னுடைய ஆதரவை தெரிவித்தார். போராட்டத்தில் பேசிய அவர், "தொழிலாளர்கள் தற்போது வாங்குவதை விட அதிக ஊதியம் அவர்களுக்கு வழங்கப்பட வேண்டும்" என்று தெரிவித்தார்.

பைடனுக்கு எதிராக தொடர்ந்து சூறாவளிப் பிரச்சாரத்தில் ஈடுபட்டு வரும் முன்னாள் அதிபர் டொனால்ட் ட்ரம்ப் நேற்று மிச்சிகனில் அடுத்த ஆண்டு அதிபர் தேர்தலுக்கான பிரச்சாரத்தில் ஈடுபட இருப்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த செப்.,15 ஆம் தேதி அன்று அமெரிக்காவில் உள்ள ஆட்டோமொபைல் தொழிலாளர் கூட்டமைப்பு சார்பாக ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் போராட்டத்தை தொடங்கினர். ஃபோர்டு மோட்டார் கம்பெனி, ஜெனரல் மோட்டார்ஸ், ஸ்டெல்லான்டிஸ் ஆகிய மூன்று நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களை உள்ளடக்கிய இந்த கூட்டமைப்பில் சுமார் 1 லட்சத்துக்கு ஐம்பதாயிரம் தொழிலாளர்கள் உறுப்பினர்களாக உள்ளனர். அமெரிக்காவில் உற்பத்தியாகும் 50 சதவீத வாகனங்கள் இந்த மூன்று நிறுவனங்களில் இருந்துதான் உற்பத்தி செய்யப்படுகின்றன. ஊதிய உயர்வு, ஓய்வூதியப் பலன்கள் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி இந்த போராட்டம் நடந்து வருகிறது.

## தென்சீன கடல் பகுதியில் சீன ஆக்கிரமிப்பு அகற்றம்

# பிலிப்பைன்ஸ் கடலோர போலீசார் அதிரடி



**மணிலா : செப். 28,**


**தென்சீனகடல்பகுதியில் சீன ஆக்கிரமிப்புகளை பிலிப்பைன்ஸ் கடலோர போலீசார் அகற்றினர்.**

பசிபிக் பெருங்கடலின் ஒரு பகுதியாக தென் சீனக்கடல் உள்ளது. தெற்கு ஆசிய நாடுகளின் போக்குவரத்துக்கு முக்கியமான இந்த பகுதியை சீனா உரிமை கொண்டாடி வருகிறது. அதேசமயம் தைவான், பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளும் இதற்கு உரிமை கோருகின்றன. இந்தநிலையில் அங்கு சுமார் 100 அடி நீளத்துக்கு மிதக்கும் தடை ஒன்றை சீனா நிறுவியது. இது சர்வதேச சட்டம் மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகளின் இறையாண்மையை மீறுவதாக பிலிப்பைன்ஸ் கண்டனம் தெரிவித்தது.

இந்த நிலையில் சர்ச்சைக்குரிய தென்சீன கடல் பகுதிக்குள் நுழைய முயன்ற பிலிப்பைன்ஸ் நாட்டின் மீன்பிடி படகுகளை சீனா தடுத்து நிறுத்தியது. எனவே சீனாவின் இந்த ஆக்கிரமிப்புகளை அகற்ற பிலிப்பைன்ஸ் அதிபர் பெர்டினாண்ட் மார்கோஸ் உத்தரவிட்டார். இதனால் பிலிப்பைன்ஸ் கடலோர போலீசார் சீனாவின் மிதக்கும் தடைகளை அகற்றினர். இதனால் அந்த பகுதியில் பதற்றம் நிலவி வருகிறது.

## சீனாவின் எச்சரிக்கையை மீறி

# ஆஸ்திரேலிய எம்.பிக்கள் குழு தைவான் சுற்றுப்பயணம்



**தைபே நகரம் : செப். 28,**

**சீனாவின் எச்சரிக்கையை மீறி ஆஸ்திரேலிய எம்.பி.க்கள் குழு தைவானுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளனர்.**

சீனாவின் கட்டுப்பாட்டில் இருந்த தைவான் கடந்த 1949-ம் ஆண்டு தனிநாடாக பிரிந்தது. எனினும் சமீபகாலமாக தைவானை தங்களது நாட்டின் ஒரு பகுதி என சீனா கருதுகின்றது. மேலும் தைவானுடன் மற்ற நாடுகள் தூதரக உறவு வைத்துக்கொள்ளக்கூடாது எனவும் சீனா எச்சரிக்கை விடுத்துள்ளது.

இந்தநிலையில் சீனாவின் எச்சரிக்கையை மீறி ஆஸ்திரேலியாவில் இருந்து 6 எம்.பி.க்கள் கொண்ட ஒரு குழுவினர் தைவான் பயணம் மேற்கொண்டுள்ளனர். தைவானுடன் பொருளாதார ஒத்துழைப்பை வலுப்படுத்துவது, எரிசக்தி மற்றும் செமி-கண்டக்டர் துறை போன்றவை குறித்து இரு தரப்பினரும் விவாதித்தனர். இதனால் ஆத்திரம் அடைந்த சீனா, ஆஸ்திரேலியாவின் பார்லி போன்ற ஏற்றுமதி பொருட்களுக்கு கூடுதலாக வரி விதித்துள்ளது. கொரோனா வைரஸ் தோற்றம் குறித்த சர்ச்சையால் சீனா-ஆஸ்திரேலியா உறவில் ஏற்கனவே விரிசல் ஏற்பட்டது. அதனை மறுசீரமைக்க ஆஸ்திரேலிய அரசாங்கம் செயல்பட்டு வரும் நிலையில் தற்போது எம்.பி.க்களின் இந்த பயணத்தால் மேலும் சிக்கல் ஏற்பட்டுள்ளது.




# நியோ மேக்ஸ் இயக்குனர்கள் அனைவரையும் கைது செய்ய உயர் நீதிமன்றம் உத்தரவு

# அனைத்து நதிகளையும் இணைப்பதே காவிரி பிரச்சனைக்கு நிரந்தர தீர்வு





# சனாதன பேச்சு: அமைச்சர்களை பதவி நீக்கம் செய்ய விஹெச்பி தலைவர்கள் வலியுறுத்தல்


| சென்னை / புதுக்கோட்டை | 28.09.2023 | varalaruu.com | பக்கம்:6 | ரூ.10 |
|---|---|---|---|---|

புதுகை

வரலாறு

நாளிதழ்

28.09.2023 வியாழன்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

பகத் சிங் , இந்திய விடுதலைப் போராட்ட செயற்பாட்டாளர், புரட்சியாளர் (பி.1907) (இ.1931)



லதா மங்கேஷ்கர் , இந்தியப் பின்னணிப் பாடகி (பி.1929) (இ.2022)



சேக் அசீனா , வங்காளதேசத்தின் 10வது பிரதமர் (பி.1947)




## இன்றைய நினைவு நாள்

கே. ஏ. தங்கவேலு , நகைச்சுவை நடிகர் (பி.1914) (இ.1994)



முல்க் ராஜ் ஆனந்த் , இந்திய எழுத்தாளர் (பி.1906) (இ.2004)



பிரிஜேஷ் மிஸ்ரா , இந்திய அரசியல்வாதி, 1வது தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் (பி.1928) (இ.2012)



## உலக வெறிநாய்க்கடி நோய் நாள்